விலை ரூபா 1—25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 சித்திரை 24 நம்ழான் 8 இதழ் 77

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 7-5-1987

யாழ் வைத்தியசாலையை மூடுவதற்கு

# அரசு செய்துள்ள முடிவானது அத்துமீறிய குற்றச்செயலாகும்

## - த. வி. கூட்டணி அறிக்கை

சென்னை,மே 6

யாழ். போதனா வைத்தியசாலையை மூடிவிடுவதற்கு இலங்கை அரசு செய்துள்ள முடிவு மனிதாபிமானமற்ற அத்துமீறிய செயலாகும்' என்று தமிழர் விடுதலைக் கூட்டணி சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தமிழர் வசிக்கும் பகுதிகள் அழிக்கப்பட்டு வருவதுடன் தமிழர்கள் தினமும் கொலை செய்யப்பட்டு வருகின்றமையை அவதானிக்கின்ற பொழுது இவற்றில் வெளிநாட்டுக் கூலிப் படையினர் இஸ்ரேல் உளவுப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என்பது தெளிவாகியுள்ளது.

இலங்கையிலிருந்து தமிழரை முற்றாக ஒழித்து விடவேண்டும் என்ற கொள்கையை இலங்கை அரசு கடைப்

(5-ம் பக்கம் பார்க்க)

● இராணுவ தாக்குதல்களால் அகதிகளாகியுள்ள

# யாழ் மக்கள் இந்தியாவில் தஞ்சம்புக கப்பல் அனுப்பவும்

## ராஜீவுக்கு வர்த்தகர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன்

"இலங்கை இராணுவத்தினர் தமிழ் மக்கள் வாழும் பிரதேசமான யாழ்ப்பாணம் மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்களினால் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகியுள்ளனர். இவர்கள் இங்கு வாழமுடியாத நிலை தற்போது தோன்றியிருப்பதனால் இந்தியாவில் தஞ்சமடைய உடன் கப்பல்களை அனுப்புங்கள்."

இவ்வாறு யாழ். வர்த்தகர் சங்கம் இந்தியப் பிரதமர் ராஜீவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக நடைபெறும் இராணுவ தாக்குதல்களினால் அகதிகளான மக்களில் பெரும்பாலானவர்கள் நோயாளர்களும், பெண்களும், குழந்தைகளு , வயோதிபர்களுமாவர். இவர்களைக் காப்பாற்றுவது தங்கள் கடமை என்பதனை பணிவுடன் தெரிவிக்கின்றோம்

யாழ். குடாநாட்டில் தற்போது உணவுப்பஞ்சம் பெருமளவில் ஏத்பட்டுள்ளமையால் தமிழ்மக்கள் பட்டினிச் சாவைஎதிர்நோக்குகின்றனர்.

[5-ம் பக்கம் பார்க்க]

பதற்றநிலைகாரணமாக

# கல்லூரி அதிபரின் முடிவுப்படி பாடசாலைகள் இன்று முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், வியாழன்

குடாநாட்டில்நிலவும் பதற்ற சூழ்நிலை காரணமாக பாடசாலைகளின் நன்மை கருதியும் மாணவர்களின் பாதுகாப்பு கருதியும் அவ்வப்பாடசாலை அதிபர்கள் எடுக்கும் முடிவுகளின்படிபாடசாலைகள் இன்று முதல் இயங்கலாம் என்று யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரி அதிபர்கள் கலந்துகொண்ட மாநாடு ஒன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையில் நேற்று நடைபெற்ற அதிபர்களுக்கான மாநாட்டிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது

கல்வித்திணைக்கள அதிகாரி

(5ம் பக்கம் பார்க்க)

## அரசு செயலகம் செயல்படவில்லை

யாழ்ப்பாணம்,வியா.

யாழ். போதனா வைத்தியசாலையை மூடி விடும்படியான அரசின் உத்தரவை ஆட்சேபித்து நேற்று இரண்டாவது நாளாக யாழ் அரசாங்க செயலகம் உட்பட நகரில் உள்ள சகல அரசாங்க திணைக்களங்களும் செயல்படவில்லை.

(5ம் பக்கம் பார்க்க)

வட்டக்கச்சியில்

## இராணுவம் முற்றுகை பல இளைஞர் கைது

(சங்கத்தானை நிருபர்)

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து ஆயிரக்கணக்கில் வெளியே வந்த இராணுவத்தினர் வட்டக்கச்சி கிராமத்தை முற்றுகையிட்டனர்.

கடந்த திங்கள் முதல் மறுநாள் வரை இராணுவம் வட்டக்கச்சியில் நிலைகொண்டு பலத்த தேடுதல்களை வீடு வீடாக நடத்தியது

(5ம் பக்கம் பார்கக)

# ஜனாதிபதிமீது சுதந்திரக்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை

## விரைவில் சபையில் கொண்டுவரப்படும்

[கொழும்பு]

ஜனாதிபதி ஜெயவர்த்தனா மீது நாற்பது குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் நம்பிக்கையில்லா தீர்மானமொன்று பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது.

இதுதொடர்பான அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களினதும் கையெழுத்து பிரதியுடனான தீர்மானத்தை சுதந்திரக் கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்ற செயலாளரிடம் சமர்ப்பித்தார்.

மேற்படி நாற்பது குற்றச்சாட்டுகளும் விரிவாக இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் திருமதி பண்டாரநாயக்கா செய்தியாளரிடம் தெரிவித்தார்.

[சி]

ஆஸ்பத்திரியை நாளை மூடும் உத்தரவு

## யாழ். நகரில் பதற்றம்

(நமது நிருபர்கள்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நாளையுடன் தற்காலிகமாக மூடப்படவேண்டுமென அரசு உத்தரவிட்டுள்ளதையடுத்து நகர மக்களிடையே பதற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. பாரிய இராணுவத் திட்டமொன்று அமுல்படுத்துவதற்குரிய முஸ்தீபு நடவடிக்கையே இவ்வுத்தரவு என்பதே பெரும்பாலான மக்களின் அச்சமாகும். இதனால் நகரச் சுற்றுடலைவிட்டு மக்களும், வர்த்தகர்களும் தமது பொருள்களுடன் வெளியேறுவதில் ஈடுபட்டிருந்ததை நேற்றுக் காணக்கூடியதாக இருந்தது.

## மக்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். ஆஸ்பத்திரியை மூடுமாறு அரசின் உத்தரவை அடுத்து யாழ் நகர மக்களில் அநேகர் தமது சொந்த இருப்பிடங்களைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றவண்ணமுள்ளனர்

யாழ்ப்பாணம் பிரதான வீதி, 1ம், 2ம் 3ம், 4ம் குறுக்குத் தெருக்கள், கொட்டடி, அத்தியடி, மற்றும் பல பகுதிகளில் குடியிருக்கும் மக்களே இவ்வாறு வெளியேறிச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

கோட்டை இராணுவத்தின் ஷெல்தாக்குதலுக்கும், ஹெலியின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கும் மத்தியில் யாழ்.நகர் வர்த்தகர்கள் நேற்று தங்கள் கடைகளில் இருந்த பொருட்களை வேறு இடங்களுக்கு ஏற்றுவதில் ஈடுபட்டிருந்தனர்.

லொறிகள், உழவு யந்திரங்கள், லாண்ட்மாஸ்ரர்கள், மாட்டுவண்டில்களில் தங்கள் பொருட்களை ஏற்றிக்கொண்டு சிலர் வீடுகளுக்கும் வேறுபாதுகாப்பான இடங்களுக்கும் கொண்டுசென்றனர்.

(8ம் பக்கம் பார்க்க)

## வெறிச்சோடிய வார்ட்டுகள்

யாழ்ப்பாணம். வியாழன்.

யாழ் போதனா வைத்தியசாலை நாளை 8-ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் மூடப்படவேண்டும் என்ற அரசின் உத்தரவை அடுதது ஆஸ்பத்திரி வார்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த நோயாளர் அனேகர் நேற்று வீடுதிரும்பியுள்ளனர்

8ம் பக்கம் பார்க்க)

## மருத்துவபீட மாணவர் ஊழியர் ஊர்வலம்

யாழ்ப்பாணம். வியாழன்,

யாழ். ஆஸ்பத்திரியை மூடும்படியான அரசின் உத்தரவை ஆட்சேபித்து யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களும், ஊழியர் சங்கமும் இணைந்து இன்று கண்டன ஊர்வலமொன்றை நடத்தவுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழக வளவிலிருந்து இன்று காலை ஆரம்பமாகவிருக்கும் இவ்வூர்வலத்தில் அனைத்து அமைப்புக்களையும், பொதுமக்களையும், மாணவர்களையும் பங்குபற்றுமாறு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தால் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (வா)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கேம்பிறிஜ் கார் E N 3000 தொடர் இலக்கம்) விற்பனைக்குண்டு. தொடர்பு: S. K. பஞ்சலிங்கம், உடையார் ஒழுங்கை, அராலி தெற்கு, அராலி. சி-8948

அன்னை தமிழ்மலர் பாலன் தமிழ் மலர் மழலை தமிழ் அமுதம் மற்றும் சிறுவர்களுக்கான ஆரம்ப நூல்கள் அனைத்தும் விற்பனையாகின்றன. விற்பனையாளர்களுக்கு விஷேச கழிவு வழங்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை (புத்தகக்களஞ்சியம்) 15/2 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். சி-8814

National S 1 வீடியோ மிக்ஷர், J. V. C GXN 70 E வீடியோ கமெரா, Orien Portable வீடியோ டெக், Sony அம்பிளிவயர், Floor Polisher, Electric Cooker, சிங்கர் தையல் மெசின் (எலக்ரிக்) மற்றும் பல வீட்டுப் பாவனைப் பொருட்கள் விற்பனைக்குண்டு. 45, பழம்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். சி-8953

ரெலிவிசன் ரியூப், Flyback Transformer ரியூனர் Deck RF Converter, IC கள் ரான்சிஸ்ரர்கள், பெல்ற் ஓடியோ கெட் [மொத்தமாகவும் பெறலாம்] car றேடியோ மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும். Jaffna Technicnl Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். (சி 8858)

திருமண அழைப்பிதழ்களும் திருமண வாழ்த்துமடல்களும், திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து மடல்களும், பிறந்தநாள் வாழ்த்து மடல்களும், சகல விலைகளிலுமான முத்திரைவகைகளும், வான் கடித உறைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. சி-8001

6-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை யூலை 26ம் நாள் திறமைச்சித்திபெற உதவும். 12 வருட கடந்த கால வினாக்களும், விடைகளும் தமிழ்மொழி, கணிதம் வெளிவந்துவிட்டன. ஒவ்வொன்றும் ரூபா 15/-. O/L 8வருட விஞ்ஞானம் கணிதம் விற்பனையாகின்றன. ரூபா25/- உங்கள் புத்தக வியாபாரியை அணுகுக. பாடசாலைகளுக்கு கழிவுண்டு. சி-8905

பாவித்த வீட்டுப் பாவனைப் பொருட்கள் தளபாடங்கள், அல்மாரி, கட்டில் மெத்தைகள், பித்தளை சில்வர் பொருட்கள், Baby Cot, மேசைகள், பெல்ஜியம் கண்ணுடிகள், Show Case, கதிரைகள், மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென்பற்றிக் சந்தியருகில். (-சி8938)

## வகுப்புக்கள்

வெளிநாடு உள்நாடுகளில் வேலைதேடி செல்பவர்க்கு ஓர்அரிய சந்தர்ப்பம் தொழில்நுட்பக் கல்வி பயிற்சியுடன் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். தொடர்பு: Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்தி சந்திக்கருகாமையில்) 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். சி-8921

## தேவை

நல்ல நிலையிலுள்ள வெஸ்பா ஸ்கூட்டர் (Vespa) அல்லது C 90 தேவை தொடர்பு: நடராசா 23, கச்சேரி நல்லூர் வீதி (சுண்டிக்குளி தபால் கந்தோர் அருகாமை) யாழ்ப்பாணம். (சி-8934)

அராலி கிழக்கு வட்டுக்கோட்டையில் அமைந்திருக்கும் கோழிப்பண்ணைக்கு அதைப் பராமரிப்பதற்கு அனுபவம் நிறைந்த ஒரு குடும்பம் தேவை. இருப்பிடம் மற்றும் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். முதல் கடிதத்திலேயே விபரங்களை அறியத்தரவும் சம்பளம் மற்றும் விபரங்களை நேரில் பேசித்தீர்த்துக்கொள்ளலாம். தொடர்பு: எஸ். ரங்கநாதன். அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை. சி-8925

## தேவை

திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையிலோ அல்லது சுன்னுகம் சந்தைக்கு அருகாமையிலோ புடவை வியாபாரம் செய்வதற்கு தகுந்த ஓர் இடம் உடனடியாகத் தேவை. தொடர்புகளுக்கு B. அரசன், 550/8 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் [தட்டாதெரு சந்திக்கு அண்மையில்) அல்லது அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் சி-8956

## சேவை

இலவசம் — மின்இணைப்பு, மோட்டர் பொருத்துதல் சம்பந்தமான சகல ஆலோசனைகளும் இலவசம். மின் உபகரணங்கள் நல்ல நிலையில் உள்ளதா இல்லையா என்பதை இலவசமாக பரிசோதித்து தருவோம் OMEGA, Manipay Road, Jaffna. சி-8955


### வாடிக்கையாளர்கட்கு
### "சன்லைட் றைக்கிளீனேஸ்"

எமது ஸ்தாபனம் 6-5-87 தொடக்கம் வழமையான சேவைகளுக்காக தவிர்க்கமுடியாத காரணங்களால் தற்காலிகமாக யாழ். கச்சேரிக்கு அருகாமையில் இடம் மாற்றம் செய்துள்ளோம். இதனல் ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

தொடர்பு முகவரி:

'அனித்தா' நிர்வாகம்.

Y. M. C. A. பில்டிங்,
கச்சேரி, யாழ்ப்பாணம். [சி 8952]

### ANITHA COOKERY

கேக் மற்றும் கைநுணுக்க கலைப்பொருட்காட்சி மிக விரைவில் நடாத்த இருப்பதால் பழக பங்குபற்ற விரும்புவோர் உடனடியாக மேற்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும், நேரடித்தொடர்பும் விரும்பத்தக்கது.

Mrs. Pavalam Sivasubramaniam
Poonari Marathady,
Kokuvil East,
Kokuvil.
[சி 8949

### தேவை

கிளிநொச்சியில் உள்ள கருணை நிலையத்திற்கு, தையல் கலை, மனையியல், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் கற்பித்து பிள்ளைகளை அன்புடன் பராமரிப்பதற்கு தியாகம், சேவை மனப்பாங்குகொண்ட பெண் ஊழியர் தேவை.

(G C E) உயர்தரம் சித்தியடைந்தவர்களும் அல்லது விசேஷ தகைமைபெற்றவர்களும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும். இருப்பிடவசதி உண்டு.

வண. சாம் டி. ஹொசிங்டன்,
மிசன் இல்லம்,
நல்லூர்.
[சி 8957]

### இருபாலையில்.....

A/L - 87
PAPER CLASS
LOGIC
திரு. விக்கி
(மே 9ல், காலை 7-00) [ஏ 3855]

THE EXPRESS INSTITUTE KOPAY

### A/L - 87
### பௌதிகவியல்
(சடப்பொருளின் இயல்புகள்)
by
திரு. சோதி

மே 8-ல் காலை, 9-00 மணிக்கு

[ஏ 3858]


# இன்றைய பலன்

திகதி 24 (7-5-1987) சித்திரை மாதம், வியாழக்கிழமை. திதி: நவமி, நட்சத்திரம் மகம்.

மேடம்: இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர், நண்பர்களாலும் உதவியுண்டு, குருவின் ஆசி நல்வழிக்கு வித்திடும்.

இடபம்; உள்ளத்தில் உவகைச் கூத்து, நீண்டநாள் பிரச்னை சமரச முடிவைப் பெறும், தொழில் லாபமுண்டு.

மிதுனம்: உத்தியோக உயர்வும் உண்டு. உறவினர் சகாயம் உண்டு, இல்லம் பல்கலைக்கழகமாகும், சுபதினம்.

கடகம்: தவறுகள் நடக்கலாம், சிந்தையிலும் குழப்பம் தோன்றும், சிறு விபத்துக்கும் இடமேற்படலாம், அவதானம்.

சிங்கம்: உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்ளுவீர்கள். கடமையிலும் கண்துடைப்பு வேலைகள் உருவாகும்.

கன்னி: மனம் நிறைந்த வாழவுமுண்டு வரவிலும் உயர்வுண்டு. வாக்குப்பலத்தால் காரியத்தைச் சாதிப்பீர்கள்.

துலாம்: வாகனம் செலுத்துவோர் கவனம் வேணடும். உற்சாகம் குன்றும், பொறுப்புடன் இருப்பின் வெற்றி நமக்கே.

விருச்சிகம்: மாதுருவழியாலும் ஆதரவுகிட்டும், இரக்க சிந்தை மேலிடும், வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாகவிருக்கும்.

தனுசு: நேர்முகப் பரீட்சைக்கு நன்னுள், உயர் கல்வி நாட்டமுண்டு. உத்தியோகச் சிறப்புண்டாம்.

மகரம்: பிரயாணத்தைப் பின்போடலாம் நத்தைவேகத்தில் காரியங்கள் நடைபெறும். நம்பிக்கை மோசடியும் இடம் பெறலாம்.

கும்பம்: வாழ்க்கையில் தலைமைப்பீடம் கிடைக்கும் கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர்.

மீனம்: தற்பெருமை மூலம் தடுமாற்றநிலை உருவாகும். வெளியிடத்தொடர்பில் மந்தநிலை காணப்படும். தொழில் நஷ்டமுண்டாம்.


### ஊர்காவற்றுறை
### ப. நோ. கூ. சங்கம்
### கேள்விப்பத்திரம்

எமது சங்கத்தில் சைக்கிள் உபஉறுப்புக்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திர உபஉறுப்புக்கள், உழவுஇயந்திர உபஉறுப்புக்கள் ஆகியன கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்குண்டு. பொருட்களைப் பார்வையிட்டு விலைக்கூறுகளை 15 - 5 - 87 க்கு முன் எழுத்து மூலம் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்
ஊர்காவற்றுறை.
ஏ-3979

### 31-ம் நாள்
### நினைவஞ்சலி



இராமலிங்கம்
சதாசிவம்

(விஷகடி வைத்திய நிபுணரும், ஓய்வுபெற்ற கச்சேரி உத்தியோகத்தரும்)

இறைவன் அடியில்
07-04-1987

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கிறோம்.

குடும்பத்தினர்.
'அசோகா'
மாவிட்டபுரம். (சி 8936)


## சட்டவிரோத விற்பனை கண்டுபிடிப்பு

பண்டத்தரிப்பு, செவ். பண்டத்தரிப்பு பரிஷ் தெங்குப் பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தினர் பெரியவிளான் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் சட்டவிரோதமான முறையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 171 லீற்றர் கள்ளை கைப்பற்றினர்.

## முற்பணம் மீளளிப்பு

பண்டத்தரிப்பு. புதன் இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட நல்லதர முடைய "யாழ்ப்பாண ரக" மண்வெட்டிகளை இறக்குமதிசெய்து விநியோகம் செய்துதருவதாக கூறி தொல்புரம் கமநலச் சேவை நிலைய பிரதேசத்திலுள்ள விவசாயிகளிடம் கடந்த ஆண்டில் பெறப்பட்ட முற்பணம் மீண்டும் அவர்களிடம் திருப்பி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த மண்வெட்டிகள் தற்போதைய சூழ்நிலையில் யாழ். மாவட்டத்திற்கு வந்துசேரும் சாத்தியம் இல்லை என்றும், இதனுல் ஏற்கனவே முற்பணம் செலுத்திய விவசாயிகளுக்கு அப்பணம் வழங்கப்படுகிறது என்றும் தொல்புரம் கமநலச் சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பி. சூசைப்பிள்ளை தெரிவித்தார்.


### வாடிக்கையாளர்களுக்கு

இன்றைய சூழ்நிலையினை கருத்தில் கொண்டு எமது ஸ்தாபனத்தின் நல்லூர் கிளையிலும் ஒலிப்பதிவு வேலைகளையும் வானொலி, தொலைக்காட்சி, வீடியோ டெக் போன்றவற்றின் திருத்த வேலைகளையும் செய்து கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

### றேடியோஸ்பதி

58, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி 8958)

766, பருத்தித்துறை வீதி, (முத்திரைச் சந்தி அருகாமை) நல்லூர்.

# பஞ்சாப்பில் பெருந்தாக்குதலுக்கு சீக்கிய தீவிரவாதிகள் திட்டம்?

## இந்திய பாதுகாப்புப் படைகள் உஷார்

**புதுடில்லி, மே-6**

**பஞ்சாப்பில் சீக்கியத் தீவிரவாதிகள் பெரும் தாக்குதலை மேற்கொள்ள இருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றையடுத்து அம்மாநிலத்தில் பாதுகாப்புப் படையினர் மிகுந்த உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.**

கடந்த சில தினங்களுக்கு முன் அம்ரிஸ்தர் நகரில் இடம்பெற்ற சம்பவமொன்றில் சீக்கியத் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டும், சிலர் காயமடைந்தும், கைதுசெய்யப்பட்டும் இருந்தனர் கைதானவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களும், பஞ்சாப்பைத் தாக்கவிருக்கும் இரகசியத் திட்டமும் பல வழிகளிலும் ஒன்றுபட்டுள்ளதை யடுத்தே பாதுகாப்பு நடவடிக்கை பலப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் அதிகளவில் கூடும் ரயில்வே நிலையங்கள், பஸ் நிலையங்கள், நகர்ப் பகுதிகள், பாடசாலைகள், மற்றும் பாலங்கள் என்பவற்றுக்கும் தற்போது அதிகளவு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இரு மாதங்களிலும் சீக்கியத் தீவிரவாதிகளின் வன்முறைகளால் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியானதுடன் உடைமைகளும் சேதமடைந்துள்ளன. அதிகரித்து வரும் இவர்களின் வன்முறை நடவடிக்கைகளை ஒடுக்க பாதுகாப்புப் படைகளுக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

உலகச் செய்திகள்

## காணமல்போன மாணவிகள் ஜே. வி. பி. முகாமில்

கொழும்பு, புதன்

கண்டியில் காணமற்போனதாகக் கூறப்பட்ட 4 கல்லூரி மாணவிகளும் தடைசெய்யப்பட்ட ஜே.வி.பி இயக்கத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் அறிவித்துள்ளனர்.

கண்டியில் பிரபல மகளிர் கல்லூரியில் கல்விகற்கும்இந்த நான்குமாணவிகளும் மர்மமான முறையில காணமல் போனதாக புகார் செய்யப்பட டிருந்தது.

இதேவேளை கண்டியிலுள்ள கட்டுகஸ்தோட்டை, வெலகெதரை ஆகிய இடங்களிலுள்ளசிலவீடுகளில்ஜே வி.பி. முகாம் அமைத்திருப்பதாக பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அவ்வீடுகளை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கு இந்த 4 மாணவிகளும் இருப்பதை கண்டுபிடித்துள்ளனர். இவர்களுடன் இவ்வீட்டில் இன்னும் இருபெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வீட டில் கண்டிப் பகுதியில் பல இடங்களை குண்டு வைத்துத்தாக்கும் திட்டங்கள் அடங்கிய வரைபடங்களும் காணப்பட்டன. [ஊ]

தென் ஆபிரிக்காவில் —

## வெள்ளையினத்தவர்க்கான தேர்தல்; கறுப்பினத்தவர் கிளர்ச்சி!

பிரிட்டோரியா, மே-6

தென்னாபிரிக்காவில் வெள்ளை இனத்தவர்கள் மட்டுமே கலந்துகொள்ளும் பொதுத் தேர்தல் நடைபெறுவதை எதிர்த்துக் கறுப்பின மக்கள் இரண்டு நாள் கிளர்ச்சிப் போராட்டம் நடத்துகிறார்கள்.

பல்லாயிரக்கணக்கான கறுப்பினத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தாலும், மக்கள் வீடுகளைவிட்டு வெளியே வராததாலும் பல நகரங்களில் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. பஸ்கள், ரயில்களில் மிகக் குறைவானவர்களே பிரயாணம் செய்தனர்.

பெரும்பான்மை இனமான கறுப்பர்களைப் புறக்கணித்து சிறுபான்மையின ஆளும் வெள்ளையர்கள் தமக்கிடையில் தேர்தலை நடத்துவதன்மூலம் தம்மை மேலும் ஒடுக்கவுள்ளதை எதிர்த்துக் கறுப்பினத்தவர்கள் பல கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டுள்ளதால் எங்கும் அச்சம் கலந்த பதற்றம் நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

போத்தா அரசின் இந்த நிறவெறித் தேர்தலை உலக நாடுகள் பலவும் வன்மையாகக் கண்டித்துள்ளன. எனினும் இவை எவற்றையும் அவர் பொருட்படுத்தவில்லை என்து குறிப்பிடத்தக்கது. [சி]

‘ஈரான் கேட்’ ஊழல்

## அமெரிக்க பாராளுமன்ற விசாரணைகள் ஆரம்பம்

வாஷிங்டன், மே 6

ஈரானுக்கு இரகசியமாக ஆயுத விற்பனைசெய்தும்,அதன் மூலம் கிடைத்த பணத்தை நிக்கரகுவா கொன்ரா கிளர்ச்சியாளர்களுக்கு வழங்கியது சம்பந்தமான றீகன் அரசுக்கெதிராக பொது விசாரணைகள் அமெரிக்க பாராளுமன்றத்தில் ஆரம்பமாகியுள்ளன.

‘வாட்டர்கேட்’ ஊழல் விசாரணைக்குப் பிறகு இந்த ‘ஈரான் கேட்’ சர்ச்சைதான் அமெரிக்காவில் பெரும் பரபரப்பையும் அக்கறையையும் ஏற்படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சி ஜனநாயக செனட்டரும், விசேஷ செனட். விசாரணைக் கமிட்டித் தலைவருமான திரு டானியல் கே. இனுேயிர் தெரிவித்துள்ளார்.

ஈரான்,நிக்கரகுவா கென்ரா கிளர்ச்சியாளர் விவகாரம் மிகவும் வருத்தத்திற்குரியதென்றும், அந்நாட்டு வெளியுறவுக் கொள்கையில் சில குறைபாடிருப்பது மிகவும் கவலையளிப்பதாயிருப்பதாகவும் அவர் கூறினார்.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கையை அமைப்பதில் அதிபர் திரு றீகன் ஒரு மூத்த பங்குதாரராக இருக்கலாம் ஆனால் முழு அதிகாரமும் பெறமுடியாதென்றும் கூறிய அவர், ஆகஸ்ட் இறுதிவரையிலும் இதுகுறித்த விசாரணைகள் நடைபெறுமென்றார். [சி]

### மின்விநியோகம்

ஒட்டுசுட்டான்,புதன்

மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு இவ்வருடம் பன்முக வரவு செலவுத் திட்டத்திலிருந்து மின்விநியோகத் செய்யப்படுகிறது.

### இடமாற்றம்

[மீசாலை நிருபர்]

வவனியா முல்லைத்தீவு மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி சபை முகமையாளர் திரு.எஸ். சாந்தலிங்கம் யாழ். மாவட்டத்துக்கு மாற்றம் பெற்றுள்ளார்.

## யாழ் நகரத்தையே அழித்தொழிக்க எடுத்த முடிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையை மூடும் அரசின் முடிவு தமிழ்மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வருடஆரம்பத்திலிருந்து யாழ் குடாநாட்டுமக்களுக்கெதிராக எரிபொருள் தடை பொருளாதாரத்தடை, தொலைத் தொடர்புத்தடை ஆகியவற்றை விதித்துவந்த அரசாங்கம் இலங்கையிலுள்ள பெரிய வைத்தியசாலைகளில் ஒன்றுனதும் வடமாகாண மக்களின் உயிர்காப்பு நிலையமாகவும் விளங்கும் யாழ்வைத்தியசாலையை மூடுவதற்கு எடுத்த தீர்மானம் யாழ் நகரத்தையே அழித்தொழிப்பதற்கு எடுத்த முடிவாகும். இவ்வாறுன கல்நெஞ்சங் கொண்டமுடிவு நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கு விதிக்கப்பட்ட தடை என்றே கூறவேண்டும். ஆதலால் இம்முடிவு அரசினுல் உடன்கைவிடப்பட வேண்டும்.

இவ்வாறுமனிதஉரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தினுல் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தாதிகள் பயிற்சியும் பல்கலைக்கழக மருத்துவக் கல்வியும் தடைப்பட்டுள்ளது. கடந்த சிலதினங்களாக இரவும் பகலும் மக்கள் நெருக்கமாக வாழும் குடியிருப்புக்களில் பொம்பர், ஹெலி, ஷெல் தாக்குதல் நடத்தி குழந்தை முதல் வயோதிபர்வரைகுடும்பம் குடும்பமாக உடல்கள் சிதறடிக்கப்பட்டு கொல்லப்பட்டுவரும் மனித வேட்டையைத் துரிதப்படுத்துவதற்காகவே வைத்தியசாலையை மூடிவிடும்படி அரசு உத்தரவிட்டுள்ளது இந்நடவடிக்கை தமிழ் இனத்தையே அழித்து ஒழித்து இனப் படு கொலைக்கு இறுதிமுடி வெடுத்துள்ளதென்பதை அரசுநிருபணமாக்கியுள்ளது.

இந்நிலையில்சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனம் உடனடியாகத் தலையிட்டு மனித உரிமைகளை நிலைநாட்டவேண்டுமென்பதுடன் சகல பொது ஸ்தாபனங்களும் இணைந்து இத்தகைய அரசின் மிலேச்சத்தனத்துக்கெதிராக, வெகுஜனப் போராட்டத்தை முன்னெடுக்குமாறும் மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்க —

## சுவீடன நிறுவனம் உதவி மே. ஜெர்மன் விசாரணை

பொன் மே-6

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களைச் சுவீடன் நிறுவனமொன்று சட்ட விரோதமாக ஏற்றுமதி செய்வதாகக் கூறப்படுவதுபற்றி மேற்கு ஜெர்மன் விசாரணை நடததுகிறது.

சுவிட்சர்லாந்தில் உள்ள ஒரு நிறுவனம்மூலம் ‘யுரேனியத்தைச் செறிவூட்டுவதற்கான’ வழிமுறைகளின் இரகசியங்களைச் சட்டவிரோதமாகப் பாகிஸ்தானுக்கு சுவீடன் நிறுவனமொன்று பெருமளவு பணம் பெற்று அனுப்பிவருவதாகவும் கூறப்பட்டிருந்தது

இதனையடுத்து மேற்படி நிறுவனங்கள்மீதும் பலத்த சோதனை நடத்தப்பட்டுள்ளதாகவும் இதற்குச் சர்வதேச உதவிகள் நாடப்பட்டுள்ளதாகவும் விசாரணைக் கமிஷன் தெரிவித்துள்ளது.

எனினும் தான் சுவீடனிலிருந்து அணுகுண்டு தயாரிப்புத் தொடர்பான எதுவித உதவிகளையும் பெறவில்லையென்று பாகிஸ்தான் மறுப்புத் தெரிவித்துள்ளது. [சி]

### மே மாத முடிவுக்குள் நடத்த வேண்டும்

சுழிபுரம், புதன்

சகல பாடசாலை அபிவிருத்தி சபைகளின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மே மாத முடிவுக்குள் நடாத்தி முடிக்கவேண்டும்எனக்கோரும் ஓர் சுற்றுநிருபம் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இதுவரை நடத்தப்படாத பாடசாலை அபிவிருத்தி சபைகளின் கூட்டங்களை மே மாதத்தில் நடாத்திப் புதிய உத்தியோகத்தர்கள் விபரத்தைத் தெரிவிக்குமாறு அதிபர்கள் வேண்டப்பட்டுள்ளனர்-

● சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை —

## ‘சிங்களக் கைதிகளிடமிருந்து தமிழ் கைதிகளைப் பாதுகாக்கவும்’

லண்டன், மே-6

இலங்கைச் சிறைகளிலுள்ள தமிழ்க்கைதிகளின் உயிர்களுக்குச் சிங்களக் கைதிகளினுல் ஆபத்து விளைவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கோரிக்கையின் விபரம் வருமாறு:-

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியானதை யடுத்து சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள்மீது சிங்களக் கைதிகள் பழிக்குப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனவே இலங்கையிலுள்ள சிறைகளிலும், முகாம்களிலும் பொலிஸ்நிலையங்களிலும் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்கு சிங்களக் கைதிகளிடமிருந்து பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## மணிவாக்கு

''உலகத்தார் உண்டு என்பது
இல் என்பான் வையத்து
அலகையாவைக்கப்படும்'' — குறள்.

(மனதுக்கு எட்டாத சூட்சும விடயங்களில்அறிவுடையார்களோடு ஒன்றுபட்டு நடந்து கொள்ள வேண்டும்)

## நமது நோக்கு

### பாடசாலைகள் பாதிப்பு

**யாழ்.** கோட்டையில் இடைவிடாது பீரங்கிவெடி தீர்க்கப்படுவது எதனைக் குறிக்கிறது?

தமிழ் மக்கள் பலர் தம் உயிரை இழப்பதற்கு அனுதாபம் தெரிவிப்பதறகா? அல்லது இதற்குக் காரண கர்த்தாவான ஆட்சி விரைவில் மறைந்து விடுமென்ற முன்உணர்வைக் குறிக்கின்றதா?

விடை எதுவானலும் சத்துராதி எம வீட்டுக்கு வந்து எம் மருத்துவமனைகள், பாடசாலைகள், மக்கள் 'உயிர்நிலையங்களை' மூடும் துணிவு எத்தகையதென் பதே மக்களின் பொதுவான விசனம்.

நான்கு பக்கமும் போர் முழக்கம் நடுவில் மக்கள் பீதியில் வாழ்வது ஒரு புதுமையா? எங்கு அவ்வாறு நடக்கவில்லை?

ஹிட்லரின் ஜெர்மனியில், இடிஅமீனின் உகண்டாவில், ஜே ஆரின் சிறிலங்காவில் பொதுமக்கள் துப்பாக்கிக்கு இரையாகாது புகலிடம் தேடுவது மனித இயற்கை. எனவே புதுமை எங்குண்டு?

நாடு வளம்பெற உழைக்கும் மக்கள்- ஊர்வளத்தை விட்டு, உயிரைப் பறிகொடுத்தாலும் ஊர்வலத்தை நகர் நடுவே நடத்துகின்றனர்.

இது நமது ஆஸ்பத்திரி. இன்று அதனை அரசாங்க ஆஸ்பத்திரி என்று கொள்வது எவ்வகையிலும் பொருத்தமற்றது. இது எமது பாடசாலை என்பதை பொதுமக்கள் எழுச்சி கொண்டு உணர்வதே இன்றைய போரின் பெரும் பயன் எனலாம்.

"முன்னோர் அளித்த அருஞ்செல்வத்தை பாதுகாப்பதில் தம் உயிரை விடுவதைக் காட்டிலும் பெரிதானது வேறெதுவுமில்லை'' என்கிறார், அன்று ரோம் நகரைப் பாதுகாத்த மாவீரன் ஹொரேஷஸ்.

இன்று இலங்கைவாழ் தமிழ் மக்களின்-ரோமாபுரி-யாழ்ப்பாணமென்பது உலகப் பிரசித்தி. இதனை மீண்டும் இலங்கை இராணுவம் கைப்பற்றப் பாரிய திட்டமிடுகிறதாம்! ஆனல் அத்திட்டத்தின் அநாகரிக அம்சம் எதுவானலும் பொதுமக்கள் கொல்லப்படுவது தவிர்க்கமுடியாதென்பதே இலங்கை ஜனதிபதியின் கூற்று.

நகர மத்தியிலுள்ள குழவிக் கூட்டை - அதுவும் ராசவள்ளி -உடைத்தெறியமரத்தையே அழித்துவிடு என்ற முட்டாள் தனம் இது.

இந்தநிலை வடக்கின் பாடசாலைகளைப் பாதிக்கின்றது. தெற்கின் பாடசாலைப் பாதுகாப்புப் பெருஞ்சர்ச்சையை ஏற்படுத்துகிறது. அங்கு எதிரி உள்வீட்டுப் பிள்ளை?

புறக்கோட்டைக் குண்டு வெடிப்பு அதன் உடனடிக் காரணமாகலாம்.

ஆனல் இன்று வெளிவருஞ் செய்தி மூடிமறைக்கப்பட்ட சில இரகசியங்களை அம்பலப்படுத்துகிறது

தெற்கில் தாய்நாட்டைப் பாதுகாக்க மறுபிறப்பெடுத்திருக்கும் ஜே வி.பி. 1971ல் நடந்த தீவிரவாதப் போர் போன்ற ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளதாம்! பாடசாலைகளைக் குழப்பக் குண்டு வெடிப்புக்களில் ஈடுபடலாமென்ற அச்சம் தெரிவிக்கப் படுகிறது. இது மிகவிபரீதமான செய்தி!

அரசாங்க பாடசாலைகள் சட்டத்தின்படி அரசாங்கத்தின்சொத்தெனலாம்; உண்மையில் இந்நாட்டுமக்களின் தவச்சாலைகள் இவை. அவற்றை அழிக்கவோ, ஒழிக்கவோ மக்கள் பேரில் போராடும் எந்தப் 'பயங்கரவாதிகளும்' துணியமாட்டாரென்பது தெளிவு.

வடக்கில் பாடசாலைகள் பல வருடங்களாகப் பாதிப்புற்றிருப்பது பகிரங்கம்.

எடுத்ததற்கெல்லாம் தமது பாடசாலைகள் என்ற உரிமைபேசும் அரசு தனது இராணுவத்தைக் கொண்டு அவற்றை அழிக்கவும், இராணுவ முகாமாக்கவும் மூடிவிடவும் தயங்குவதில்லை.

இவற்றைப் பொருட்படுத்தாது பாடசாலைகளுக்குப் போகும் மாணவர் வழியிலும்) பாடசாலைகளிலும் குண்டு வீச்சால், ஹெலி தாக்குதலால் உயிரிழந்தவர் எத்தனைபேர்!

உயிரைக்கையில் ஏந்தி எந்த நிலைமையிலும் பாடசாலைகள் இயங்குவது யாழ்ப்பாணத்தின் தனிச் சிறப்பு.

இந்தப் பெருமையை மிகைப்படுத்தாது, போர் மத்தியிலும் கல்வி பாதுகாப்புடன் தொடர்வதே பகைவரை வென்று சுதந்திரமாக வாழ உதவும் வழி.

### மறுப்பு

யாழ்ப்பாணம்

கடந்த 4ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வளவுக்குள் பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டதாக வெளிவந்தசெய்தி தவறானதென மேற்படி நீதிமன்ற அலுவலக பணியாளர் திரு. க. சண்முகலிங்கம் அறிவித்துள்ளார்.

### அகதிகளுக்கு உதவி

சித்தன்கேணி, புதன்

இராணுவ நடவடிக்கை காரணமாக காங்கேசன்துறையில் இருந்து இடம்பெயர்ந்து சங்கானை கலாசார மண்டபத்திலும், நீதிமன்றத்திலும் தஞ்சமடைந்துள்ளவர்களின் உணவுத் தேவைக்காக சங்கானை மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம் ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

சங்கானையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட அகதிகள் புனர்வாழ்வு அமைப்பினரிடம் மேற்படி சங்கம் இப்பணத்தை கையளித்துள்ளது.

# லண்டன் தொலைக்காட்சி நடத்திய கருத்தரங்கம்

[நேற்றைய தொடர்ச்சி]

தப்பர்: எவ்வளவு காலத்திற்கு இது நீடிக்கும்...?

அமைச்சர்: அது ஒரு ராணுவத்துறை கேள்வி அதனை நான் கூறமுடியாது.

தப்பர்: நீங்கள் இக்குழுக்களின் தளங்களைத் தாக்கியுள்ளீர்கள் என்பது எப்படி தெரியும்?.

அமைச்சர்: யாழ் பிரஜைகள் இது பற்றி எமக்கு தகவல் தந்துள்ளனர். அத்துடன் ஹெலிகொப்டரிலிருந்துஎடுக்கப்பட்டபடங்களும் அவர்களின் தொடர்புகளை இடைமறித்து கேட்டதாலும் அவர்களின் தளங்களை சரியாக தாக்கியுள்ளோம் என்பதை அறந்து கொண்டோம்.

தப்பர்: யாழ். குடா நாட்டை மீண்டும் கைப்பற்ற உத்தேசித்துள்ளீர்களா?

அமைச்சர்; நான் அக்கோணத்தில் நினைக்கவில்லை. குடாநாடு இலங்கையின் ஒரு பிரதேசமாகும். இலங்கை ஒரே நாடாக இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும். ஆனல் ஒரு சமாதான தீர்வுக்கான கதவுகளை நாங்கள் மூடவில்லை.

தப்பர்: சில பத்திரிகைச் செய்திகளின்படி இலங்கைப் படையினரின் ஆகாயத்தாக்குதலினல் 200-300 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அப்படியானல் உங்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நீங்கள் எவ்வாறு ஆதரிப்பீர்கள்?

அமைச்சர்: அது உண்மையல்ல. நாங்கள் ஏற்கனவே பொதுமக்ளுக்கு இந்த தளங்களுக்கருகில் வசிக்க வேண்டாமென எச்சரித்தோம். இதனல் பலர் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். அத்துடன் தீவிரவாதிகளுக்கு ஆதரவானதான சென்னை ,ஹிந்து' கூட கொல்லப்பட்டவர்கள் 20க்கும் குறைவானவர்கள் எனக்கூறியுள்ளது.

தப்பர்:- அதாவது, அந்தளவு எண்ணிக்கை சிவிலியன்களோ கொல்லப்பட்டனர். 200- 300 பேர் கொல்லப்படவில்லை எனக்கூறுகிறீர்களா?

அமைச்சர்: இது தீவிரவாதிகளின் வழமையான பொய்ப் பிரசார நடவடிக்கையில் ஒன்று.

தப்பர்: சத்தி... கொல்லப்பட்ட தமிழரின் சரியான எண்ணிக்கையென்ன?

சத்தி: 200க்கு மேற்பட்ட தமிழர் கொல்லப்பட்டனர். அத்துடன் இன்னென்றையும் கூறவிரும்புகிறேன். பேச்சுவார்த்தைக்குத் தாங்கள் தயாராய் இருப்பதாக அமைச்சர் கூறினர். ஆனல் அது உண்மையல்ல. அவர்கள் ஒரு ராணுவ தீர்வை நாடியுள்ளனர். தமிழ் மக்கள் வாழும் நிலைகள் மீது ஆகாய, கடல் தாக்குதல்களையும் ஷெல் தாக்குதல்களையும் அவர்கள் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இத்தாக்குதலினல் எமக்கு எதுவித இழப்புமில்லை பொதுமக்களை கொன்றுவிட்டனர்.

(குறுக்கீடுகள்)

தப்பர்: அமைச்சர் உங்கள் அரசாங்கத்துக்குஉதவ இந்திய அரசாங்கம் விரும்பினல் நீங்கள் என்ன கோரிச்கைகளை விடுப்பீர்கள்?

அமைச்சர்: நாங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். முக்கியமாக இவர்களை (ரவி கத்தியைச் சுட்டிக் காட்டி) இந்தியாவில் தங்கியிருப்பதைத் தடுக்குமாறு கோரினேம். ஏனெனில் அவர்கள் இந்தியச் சட்டங்களையும் வழுவியுள்ளனர். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஆட்களும் பொருள்களும் கொண்டு வரப்படுவதைத் தடுக்குமாறு கோரியிருந்தோம.

தப்பர்: சமாதான தீர்வுக்கான சாத்தியக் கூறுகள்பற்றி ஆராய்வோம்.

அமைச்சர்: இதற்கு நாம் தயார். உண்மையில் திருமலை, கொழும்பு சம்பவங்களுக்கு முன்னதாக நாங்கள் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தமொன்றை சமர்ப்பித்தோம் அத்துடன் நிலைமையை மேலும் சீராக்க பல நடவடிக்கைகளை எடுக்க நாங்கள் தயாராய் இருந்தோம். துரதிர்ஷ்டவசமாக் இடம்பெற்ற தாக்குதல்கள் இவ்விரு இயக்கங்களும் பொதுமக்களைக் கொல்வதை ஒரு கொள்கையாகக் கொண்டுள்ளன வென்பதைக் காட்டுகிறது.

தப்பர்: சரி அமைச்சர் சமாதானத்தீர்வுக்கு தயாராக இருப்பதாக நீங்கள் கூறுகிறீர்கள். ஆனல் அமைதி நிலைநிறுத்தப்படும்வரை பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளதாக உங்கள் பிரதமர் பிரேமதாஸா பாராளுமன்றில் கூறியுள்ளாரே?

**தொகுப்பு:- இ. செந்தில்**

அமைச்சர்: அவர் அவ்வுரையை ஆற்றியபோது நான் அங்கிருந்தேன். விடுதலைப்புலிகளும்' ஈரோஸும் பொதுமக்களைத் தாக்குவதனல் அம்மக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்றே அவர் கூறினர்.

தப்பர்: அமைச்சர்... சமாதானதீர்வில் நம்பிக்கை வைத்து தமிழ்க் கெரில்லாக்களுடன் பேச்சு நடத்த நீங்கள் இன்னமும் தயாராயுள்ளீர்களா?

அமைச்சர்: நான் இல்லையென்று சொல்லவில்லை.

தப்பர்: டிச. 19ஆலோசனைகளிலிருந்து நீங்கள் பின்வாங்கியதினல்தான் இந்தியா தனது சமாதான முயற்சிகளைஇடைநிறுத்தியது எனக் கூறப்படுகிறது. இவ்வாலோசனைகள் தொடர்பாக தற்போது உங்கள் நிலை என்ன?

அமைச்சர்; இரு இயக்கங்களும் இவ்வாலோசனைகளை நிராகரித்த நிலையில்நாமிருப்பதாக எமது ஜனதிபதி கடந்த பெப்ரவரிமாதம் தெளிவுபடுத்தியிருந்தார்......

தப்பர்: எனது கேள்வியை சத்தியை நோக்கித்திருப்புமுன்னர் உங்களிடம் மீண்டும் கேட்கிறேன். டிச 19 ஆலோசனைகளை உங்கள் அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றனவா?

அமைச்சர்: டிச 19 ஆலோசனை உட்பட சகல திட்டங்கள் தொடர்பான அரசாங்க நிலையை எமது ஜனதிபதி கடந்த பெப்ரவரியில் தெளிவுபடுத்தினர். ஆகவே அதனை மீண்டும் நான் தெளிவுபடுத்த வேண்டிய அவசியமில்லை.

தப்பர்: ஹம்ப்ரே.. அரசாங்கம் இந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொள்கிறதா இல்லையா?

ஹம்ப்ரே: பெரும்பான்மைச் சிங்களவரின் அபிலாஷைகள் பற்றி அரசாங்கம் தடுமாறுகிறது போலுள்ளது.

தப்பர்: அ-து சிங்களவரை நினைத்து அரசாங்கம் பயப்படுகிறதுபோலுள்ளது.

ஹம்ப்ரே: இப்போதைய நிலையில் வன்முறைகள் சிறிது ஓயும்வரை அரசாங்கம் காலத்தை இழுத்தடிக்கப் பார்க்கிறது என நினைக்கிறேன்.

தப்பர்: சத்தி, நீங்கள்இந்த ஆலோசனைகளை நிராகரித்து விட்டதாகவே அரசாங்கம் கொள்கிறது. நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

சத்தி: எல். ரி. ரி. ஈ., ஒரு சமாதானத் தீர்வையே நாடுகின்றது என்பதையே நாம் எப்போதும் வலியுறுத்திவருகின்றோம். இந்திய அரசின் முயற்சிகளை கடந்த 4 ஆண்டு காலமாக முறியடித்தது நம் இலங்கை அரசே......

தப்பர் குறுக்கிட்டு

தப்பர்: புலிகளின் பிரதிநிதி என்றவகையில் டிச 19 ஆலோசனைகளை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

சத்தி: உண்மைஎன்னவென்றல் இந்த ஆலோசனைகள் பற்றியவிபரங்கள் இந்திய அரசினலோ அல்லது இலங்கை அரசினலோ இதுவரை எமக்கு உத்தியோக பூர்வமாக தெரிவிக்கப்படவில்லை.

தப்பர்: அப்படியானல் நீங்கள் அவற்றை நிராகரிக்கவில்லை...?

சத்தி: தமிழ்மக்களுக்குப் பூரண பாதுகாப்பு, கௌரவம், உரிமை ஆகியவற்றைத் தரும் எந்தத்திட்டம் பற்றியும் நாம் பேச தயாரயுள்ளோம் இதுவே எமதுநிலைப்பாடு.

தப்பர்: சரி ரவி டிச 19 ஆலோசனை தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன?

ரவி: இவ்வாலோசனைகள் புதியசமாதான பேச்சுவார்த்தைகளுக்கான அத்தியாயமாக அமையலாம் என்பதே எமது முடிவு. உண்மையில் இலங்கை அரசாங்கமே இதுவிடயத்தில் தடுமாற்றமடைந்துள்ளது.

தப்பர்; அமைச்சர் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அத்திவாரமாக இவ்வாலோசனைகள் அமையலாமென ஈரோஸ் பிரதிநிதி கூறுகிருர். இதற்கு உங்கள் பதிலென்ன?

அமைச்சர்: நன்று அவர்களுடன் புளொட், ஈ. பி ஆர். எல் எவ், ரெலோ ஆகியோரின் நிலையும் கிட்டத்தட்ட அதுதான். உண்மையென்னவென்றல் விடுதலைப் புலிகள் இயக்கம் இதனை நிராகரித்துள்ளது நான் தொடர்புகொள்ளும் சில தீவிரவாதிகளின் கருத்துப்படி இந்த ஆலோசனை அவர்களின் தாயகத்தை துண்டுபோடுவதாக அவர்கள் கருதுவதனல் அதனை எதிர்க்கின்றனர்.

தப்பர்: ஈரோஸ் இயக்கப் பேச்சாளர் முதற்படியாக இவ்வாலோசனைகளை ஏற்றுக் கொள்வதால் மேலதிக சலுகைகளை நீங்கள் வழங்கத்தயாராயுள்ளீர்களா?

அமைச்: இது விடயத்தில் [டிச. 19 ஆலோசனை] எமது நிலைப்பாடு தெளிவாயுள்ளது- [ஏற்றுக் கொள்ளப்பட்டபின்) இதுபற்றி பாராளுமன்றத்துக்கும், பொதுமக்களுக்கும், ஜனதிபதி விளக்கமளித்து அவர்களையும் இவ்வாலோசனைகளை ஏற்றுக்கொள்ள வைப்பார். ஆனல் எல். ரி. ரி. ஈ இதனை ஏற்றுக் கொள்ளமறுப்பதினல் இது தாமதமாகியுள்ளது.

தப்பர்: அ-து நீங்கள் மேலதிய சலுகைகளை வழங்க தயாரில்லை......?

அமை: ஈரோஸ் மட்டும் இதில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. ஒரு சிலருடன் ஒரு குறிப்பிட்ட கொள்கைபடிப் படையில் பேச்சுவார்த்தை நடத்துவதும், அதே நேரம் ஏனையோர் பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருக்க இயலாது. பேச்சுக்கள் தொடருவதானல் சம்பந்தப்பட்ட அனைவரும் பங்குபற்ற வேண்டும்.

தப்பர்: இனப்பிரச்னை தொடர்பான முட்டுக்கட்டை நிலையை போக்குவதானல் இந்தியாவிலுள்ள தமிழ்குழுக்கள் மீது பிரதமர் ராஜீவ்

(5-ம் பக்கம் பார்க்க)

## தீவிரவாதம் மோசமடைவதானல்—

# கொழும்பு மருத்துவமனையையும் மூடிவிட உத்தரவிடுங்கள்

### ஜனதிபதிக்கு தந்தி

யாழ்ப்பாணம், வியா.

"அரசியல் பிரச்னைக்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் அப்பாவிப் பொதுமக்களைப் படையினரைக் கொண்டு கொலை செய்விப்பதையும் யாழ் மருத்துவ மனையை மூடுவதையும் உடனடியாக நிறுத்துங்கள் அல்லது கொழும்பிலும் தீவிரவாதநிலை மோசமடைந்து வருவதாகக் கருதினல் கொழும்பு மருத்துவ மனையையும் மூட உத்தரவிடுங்கள்"

யாழ். போதன வைத்திய சாலையை மூடுவதற்கு அரசு உத்தரவிட்டமை தொடர்பாக தமிழர் முன்னேற்றக் கழகம் ஜனதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய அவசரத் தந்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அந்தத் தந்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

"மனித நேயமற்ற, மனித உரிமைத் தடைகளை விதித்து வந்த அரசாங்கம் பல தடவைகள் படையினரின் தாக்குதலுக்குள்ளான யாழ். ஆஸ்பத்திரியை மூடுவதற்கு உத்தரவிட்டுள்ளது. முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் நேரத்துக்கு நேரம் மாறுபட்ட அபிப்பிராயங்களையும் கூறிவருவது கவலைக்கிடமாகவுள்ளது".

## "இலங்கைத் தமிழரைக் காப்பாற்ற—

# உறுதியான நடவடிக்கை எடுக்க பிரதமர் காந்தியை தூண்டவேண்டும்"

உடுப்பிட்டி, புதன்.

"இலங்கை அரசாங்கத்தின் ராணுவ நடவடிக்கைகளும், விமானக்குண்டுத்தாக்குதல் யாழ் குடாநாட்டில் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இதனல் தினமும் அப்பாவித் தமிழ் மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டும், காயமடைந்துவருகின்றனர். அனேகமானேர் தமது வீடு வாசல்களை இழந்து, சொத்துக்களை இழந்து இருக்க இடமின்றி பொது இடங்களில் படுத்துறங்குவதுடன், உண்ண உணவின்றி பட்டினியால் வாடி வதங்கியும் வருகின்றனர் இந்நிலையில் இலங்கை அரசு யாழ். குடாநாடு மீது ராணுவ நடவடிக்கைகளையும் விமானக்குண்டுவீச்சையும் மேலும் விஸ்தரிக்கத் தீர்மானித்துள்ளமையை எண்ணிப்பார்க்கும் போது எமது பாரம்பரிய இப்பிரதேசம் சுடுகாடாக மாறும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. எனவே தமது உயிரைத்துச்சமாக மதித்துப் போராடிவரும் போராளிகள் தலைவர்களைக் கலந்தாலோசித்து, ஒரு தீர்க்மான உறுதியான நடவடிக்கையில் இறங்குமாறு, பாரதப்பிரதமர் ராஜீவ்காந்தியைத்தூண்டுவது தங்களது தலையாய கடமையாகும்"

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம பிரதம குருசுவாமி சித்ரூபானந்தா தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் அவர் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழகத்தில் உயிர்நாடியாக இருப்பவர் தாங்கள். தமிழர்களாகிய நாங்கள் எமது அரசாங்கத்தின் அதர்மமான செயல்களால் 1983 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி இராணுவத்தினர் எங்கள் கிராமத்தில் முதன் முதலாக அப்பாவித் தமிழர்களைக் கொல்ல ஆரம்பித்ததில் இருந்து எங்கள் சேவாச்சிரமம் புனர்வாழ்வுப் பணியில் இறங்கியது,

1985 ஆம் ஆண்டு மே மாதம் வல்வெட்டித்துறையில் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட தமிழர்கள்கள் கட்டடம் ஒன்றுக்குள் பூட்டிவைக்கப்பட்டு கட்டம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறாக எமது நாட்டில் ஆயிரக்கணக்கான விதவைகள், பச்சிளம் பாலகர்கள் பரிதவிக்கின்றார்கள். இவர்களுக்கும் சேவாச்சிரமம் மாதந்தோறும் பால்மா, அரிசி, உடுபிடவை வழங்கி வருகிறது

கடந்தவருடம்11ல், நவம்பர் ஷெல்தாக்குதலினல்பலஅப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். 22- 4- 1987 அன்று பொம்மர் விமானத் தாக்குதலினல் 11 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன், அநேகமானேர் படுகாயமடைந்தனர்.

நமது குடாநாடு தற்சமயம் சுடுகாடாக மாறிக் கொண்டிருக்கிறது.

வைத்தியசாலைகள் இந்துக் கோயில்கள், கல்லூரிகள், வீடுகள் விமானக்குண்டுத் தாக்குதலால் தரை மட்டமாகிவிட்டன.

யாழ். கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் யாழ். அரசினர்வைத்தியசாலை மீது வீழ்ந்து வெடித்ததில் 11 நோயாளிகள் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் 30- 3- 87 நடைபெற்றுள்ளது

சுயகௌரவத்தையும், பதவி வெறியையுமே இலங்கை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் காரணமாக எமது இனத்தைப் பூண்டோடு அழிக்க இரவு பகலாக அது முயற்சிகளை மேற்

# "நோயாளர்-ஊழியரின் பாதிப்பினுல் இவ்வுத்தரவு"

### அரசதரப்பு அறிக்கை

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி எதிர்வரும் எட்டாம் திகதி முதல் தற்காலிகமாக மூடப்பட்டு சகல பணிகளையும் பருத்தித்துறையிலுள்ள ஆதார வைத்தியசாலைக்கும், தெல்லிப்பளையிலுள்ள மாவட்ட வைத்தியசாலைக்கும்இடம் மாற்றுவதென்று போதன வைத்தியசாலைகள் அமைச்சும் சுகாதார அமைச்சும் தீர்மானித்துள்ளன.

அண்மைக்காலமாக ஆயுதப் படையின நக்கும் தமிழ்த்தீவிரவாதிகட்குமிடையில் இடம் பெற்றுவரும் மோதல்களின் போது பலநோயாளிகள்,ஊழியர்கள், வைத்தியர்கள் காயமடைந்தும் கொல்லப்பட்டிருப்பதினலுமே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக இது தொடர்பாக போதன வைத்தியசாலைகள் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ் வைத்தியசாலை, போதன வைத்தியசாலையாகவும் இருப்பதனல் இதன் சுற்றுடல் தாக்குதல் தவிர்ப்புப் பிரதேசமாக பிரகடனம் செய்யப்படவேண்டுமென அரசாங்க வைத்திய அதிகாரிகள்சங்கம் கோரியிருந்ததாலும் பல்வேறு காரணங்களுக்காக இந்தக் கோரிக்கை நடைமுறைப்படுத்தப்பட முடியாதுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான இடமாற்றத்தில் நோயாளிகள்,வைத்தியர்கள், ஆஸ்பத்திரி ஊழியர்கள் அனைவரும் அடங்குவதுடன் உபகரணங்களும், தளபாடங்களும் இடமாற்றப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி இரு ஆஸ்பத்திரிகளையும் தவிர மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையிலும் நோயாளிகளை பராமரிக்கசகல வசதிகளும் செய்து கொடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரியை தற்காலிகமாக இடமாற்றுவதால் ஏற்படக்கூடிய வசதியீனங்களை பற்றிய தகவல்களைத்தருமாறும் யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பிரிவும் பிராந்திய பணிப்பாளரும் கேட்டுள்ளனர்.

போதன வைத்தியசாலைப் பிரிவும் இங்கு மூடப்படுவதால் மருத்துவபீட மாணவர்களுக்கும், மாணவ தாதிமார்களுக்கும், பருத்தித்துறையிலுள்ள ஆதார வைத்தியசாலையிலும் தெல்லிப்பழையிலுள்ள மாவட்ட வைத்தியசாலையிலும், பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன. எனினும் மாணவர்கள் விரும்பும் பட்சத்தில் ஏனைய போதன வைத்தியசாலைகளிலும் தற்காலிகமாக பயிற்சியை பெற்றுக்கொள்ள வசதிகள் செய்துகொடுக்கப் படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். பெரிய ஆஸ்பத்திரி ஊழியர்கள் அங்கு தமது விடுதிகளில் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லையென்றும் ஆஸ்பத்திரி வளவிற்கு வெளியே பாதுகாப்பான இடத்தில் தங்குமிட வசதி செய்துதரும்படி கேட்டிருந்தபோதும் இது தொடர்பாக ஏதும் செய்ய முடியாதென்று சுகாதார அமைச்சு தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. [சி]

## லண்டன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்குதல் செலுத்த வேண்டும் என உங்கள் சகாக்கள் சிலர்கூறிவருகின்றனர். தேசிய பந்தோபஸ்து அமைச்சர் என்ற ரீதியில் ராஜீவ்காந்தியினல் அத்தகைய நெருக்குதலை அளிக்க முடியுமென நீங்கள் கருதுகிறீர்களா?

அமை: இந்தியாவின் உள்நாட்டு அதிகார அமைப்புப் பற்றிக் கருத்துக் கூற என்னல் முடியுமென நினைக்கவில்லை ஆனல் ஒன்று கூறலாம். தமிழகத்திலிருந்து இலங்கையர் மீது சாதாரண இந்திய பிரஜைகளுக்குச் செலுத்தப்படும் நீதிமுறை செலுத்தப்படுமேயானல் நிலைமைகள் (இங்கு) மாறத்தொடங்கும்.

தப்பர்: ஹம்ப்ரே... இந்தியாவினல் அந்த நெருக்குதலை செலுத்த முடியுமா?

ஹம்ப்ரே: டில்லியின் கொள்கைகள் அண்மைக் காலமாக தடுமாற்றத்துடன் காணப்படுகின்றன. பிரதமர் காந்தி ஏனைய உள்நாட்டு பிரச்னைகளும் இருப்பது ஒரு காரணமாயிருக்கலாம்.

தப்பர்: எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்னைக்கு தீர்வுகாண்பதென்பது சாத்தியமான விடயமென நினைக்கிறீர்களா?

அமை; இது போன்ற பிரச்னைகளுக்கு அது ஒன்றுதான் வழி. ஆனல் அதற்கு நான் காலத்தை வகுத்துக் கூறமுடியாது. [முற்றும்]

குறிப்பு:- நேற்று பிரசுரமான இத்தொகுப்பின் முதற் பாகத்தில் ஒளிபரப்பியது என்பதற்கு பதிலாக ஒலிபரப்பியது என குறிப்பிடப் பட்டுள்ளது.

## பதற்றநிலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள், பாடசாலை அதிபர்கள் கலந்துகொண்ட இம்மாநாட்டினைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள சிலபாடசாலைகள் இன்று தொடக்கம் மறுஅறிவித்தல்வரை மூடப்படவுள்ளதாக தெரியவருகிறது. [ஒ]

## வட்டக்கச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச் சமயம் வட்டக்கச்சியில் சூட்டுச் சம்பவமும் இடம் பெற்றது இச் சம்பவத்தில் பலர் காயமடைந்தும் இறந்தும் இருக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது.

இராணுவத்தினர் வட்டக்கச்சியிலிருந்து திரும்புகையில் பல இளைஞர்களை கைதுசெய்து கொண்டு முகாம் திரும்பினர்கள்.

இதனல்கிளிநொச்சி,பரந்தன் பகுதியில் கடந்த சிலதினங்களாக பதற்றநிலை உருவாகியுள்ளது.

## யாழ்.மக்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1983-ம் ஆண்டு இலங்கையில் நடந்த கலவரத்தின்போது தங்கள் தயாரான திருமதி இந்திரா காந்தி கப்பல்களை அனுப்பி தென்பகுதி தமிழ் மக்களைக் காப்பாற்றி வடபகுதிக்கு அனுப்பியது தாங்கள் அறிந்ததே. இதே நிலையை கடைப்பிடித்து தமிழ் மக்களை தாங்கள் காப்பாற்றவேண்டும்.

எமது பிரச்னைக்கு சமாதான தீர்வுகாண தாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகள் வெற்றியளித்து தீர்வு நடைமுறைப்படுத்தப்படும்போது இந்தியாவில் தஞ்சமடைந்தவர்கள் மீண்டும் தத்தமது சொந்தப் பிரதேசங்களுக்கு திரும்பிவிடுவர்.

இம்மகஜரின் பிரதிகள் தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன், மற்றும் இலங்கையிலுள்ள இங்கிலாந்து, அமெரிக்க, கனடிய, தாய்லாந்து, சிங்கப்பூர், பாகிஸ்தான், சோவியத் யூனியன். சீன தூதுவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ஒ)

## அரசு செயலகம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணம்கச்சேரி,உதவி அரசாங்க அதிபர் அலுவலங்கள் கல்வித் திணைக்களம். கூட்டுறவுத் திணைக்களம், மற்றும் அரசாங்க காரியாலயங்கள் யாவும் ஸ்தம்பித்தன. (வா)

## யாழ். வைத்திய

[1-ம் பக்கத் தொடர்ச்சி

பிடித்து வருகின்றது. இதன் ஒருபகுதியை பெரும்பாலான தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வகை தொகை இன்றி கொல்லப்பட்டு வருகிறார்கள்.

பொருளாதார முற்றுகையை ஏற்படுத்தி தமிழர் வசிக்கும் பகுதிகள் மீது குண்டு மாரி பொழிந்து தமிழ் மக்களுக்கு சொல்லொணு துன்பங்களை இலங்கை அரசு ஏற்படுத்திவருகிறது. (ஒ)

## அரச. மருந்து கலவையாளர் கண்டனம்

(பண்டத்தரிப்பு நிருபர்)

வடபகுதி மக்களுக்கு சிறந்ததொரு பிணி தீர்க்கும் உயிர் காக்கும் வைத்தியசாலையாக விளங்கி வரும் யாழ் அரசினர் ஆஸ்பத்திரியை மூடுவதற்கு அரசு முடிவு செய்துள்ளதை அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை பலமாகக் கண்டித்திருப்பதுடன் தனது ஆட்சேபத்தையும் தெரிவித்துள்ளது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சங்கரப்பிள்ளை இராசம்மா

மலர்வு: 06-04-1925
உதிர்வு: 18-04-1986

இல்லறம் என்னும் நல்லறமாய்; குறைவிலா குணக்குன்றாய்; கேட்போர் நயந்திடும் குறைவிலா ஒளிவிளக்காய்; எல்லோர்க்கும் அன்புத்தெய்வமாக விளங்கி, எம்மையெல்லாம் வழிநடத்திய அன்புத்தெய்வமே, மறைந்தாய் ஓராண்டு மறைந்துவிட்டது. உன் புகழ் என்றும் நிலைக்கும். ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திக்கின்றோம். எங்கள் நினைவஞ்சலிகள்.


பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள். மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

சித்தங்குறிச்சி,
பூநகரி. (சி 8960)

**லிடோ** யாழ் நகர்
10-30, 2-30 6-30
சிவகுமார் -சுஹாஷினி நடித்த
**சிந்து பைரவி**
1986ம் ஆண்டு இந்திய ஜனதிபதியின் சிறந்தவிருதைப்பெற்ற படம் சங்கீத இசைப்பிரியர்களுக்கோர் சிறந்த வரப்பிரசாதம்
[புதிய வெளியீடு கலர்]

புதிய வெளியீடு
**வெலிங்டன்** திரையில்
10-30, 2-30, 4-30, 6-30
நவீனரக ஆயுதங்களுடன் பயங்கர சண்டைகள் நிறைந்தது.
Anthony Quinn - James Corburn
Lindsay Wagner in
HIGH RISK
(Colour)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**



யாழ். கச்சேரி முன்பாக ஆஸ்பத்திரி ஊழியர்கள் மறியல் போராட்டம் நடாத்துவதையும், கச்சேரி பிரதான வாசலை மறைத்து நிற்பதையும் காணலாம். (படம்: தேவா)

### கொழும்பிலும், ஏனைய நகரங்களிலும்

# புதியவர் தங்கியிருப்பின் பொலிஸாருக்கு அறிவிக்கவேண்டும்

## புதிய சட்டமூலம் வருகிறது

கொழும்பு புதன்

தென்னிலங்கையில் வீட்டுச் சொந்தக்காரர்கள் அத்தொகுதி வாக்காளர் பட்டியலில் தமது வீட்டு விலாசத்தின் கீழ் குறிப்பிடப்படாத நபர்கள் யாரும் தம்முடன் தங்கியிருந்தால் அவர்கள் பற்றிய தகவல்களைப் அத்தொகுதிப் பொலிசாருக்கு அறிவிக்க வேண்டுமெனக்கோரும் சட்டமூலமொன்றை அரசாங்கம் நிறைவேற்றவுள்ளதாக தெரியவருகிறது.

கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் தமிழ்த்தீவிரவாதி வந்து தங்குவதைத் தடுக்கவே இப்படியான நடவடிக்கை எனத் தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறின. இதேவேளை வீட்டுச் சொந்தக்காரர்கள் தமது வீடுகளேதும் காலியாக விருந்தால் அவற்றின் தகவல்களையும் பொலிசாருக்கு அறிவிக்கவேண்டுமெனவும் இச்சட்டத்தி மூலம் கோரப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

### புறக்கோட்டை:

# ‘இலங்கைவங்கி, தமிழ் பெண் ஊழியர்மீது விசாரணை!

[கொழும்பு]

புறக்கோட்டை இலங்கை வங்கிக்கிளையில் பணிபுரியும் தமிழ் பெண்ணொருவரை இரகசியப் பொலிசார் விசாரணைக்குட் படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

புறக்கோட்டையில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற சமயத்துச்கு சற்று முன்பதாக இப்பெண் குறுகிய கால விடுமுறையில் சென்றுராம் இவரது நடமாட்டங்கள் பற்றியும் அவரது தொடர்புகள் பற்றியும் இரகசியப் பொலிசார் ஆராய்ந்து வருகின்றனராம்.

இதேவேளை அன்றையதினம் புறக்கோட்டையில் குண்டு வெடிப்பதற்கு பலமணிநேரத்திற்குமுன்பதாகவே குண்டு வெடித்த பகுதியிலிருந்தஸ்தாபனங்களில் பணிபுரிந்த தமிழ் ஊழியர்கள் பலர் வேறுஇடங்களுக்குச் சென்றிருந்தார்கள் என்பது பற்றியும் குண்டு வெடித்தசமயம் அப்பகுதியிலிருந்த தமிழர் ஸ்தாபனங்களிலிருந்து துப்பாக்கிச் சூடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன? என்பதுபற்றியம் குண்டு வெடித்த தினத்துக்கு பல நாட்களின் பின்னர் இந்திய பிரஜைகள் இருவர் அவ்விடத்தை ஆராய்வதற்கு வந்திருந்தார்களா என்பது பற்றியும் குண்டுவெடிப்புக்கு முன்பதாக அப்பகுதியிலுள்ள தமிழ்க் கடைகள்பலவும் நேரத்துடன் மூடப்பட்டனவா என்பது பற்றியும் இரகசியப் பொலிஸார் ஆராய்ந்துவருகிறுர்களாம்.

## பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய்

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அநுராதபுரத்திலிருந்து லொறி மூலம் ஆறுயிரத்து அறுநூறு லீற்றர் மண்ணெண்ணை கொண்டுவரப்பட்டதை அடுத்து சங்கக்கிளைகள் ஊடாக பங்கீட்டு அட்டைக்கு ஒரு லீற்றர்வீதம் பொதுமக்களுக்கு மண்ணெண்ணை விரைவில் விநியோகிக்கப்படவிருப்பதாக சங்கத் தலைவர் திரு ஆ ஜேசுதாசன் தெரிவித்தார்.

## தமிழ் ஆங்கில நூல்கள்

[மட்டுவில் நிருபர்]

சாவகச்சேரி நகரசபையின் மத்திய பொதுநூல் நிலையத்திற்கு நகரசபைஇந்த ஆண்டு சுமார் நாற்பதிஞயிரம் ரூபா செலவில் புதிய தமிழ்-ஆங்கில நூல்களை கொள்வனவு செய்துள்ளது

## ஆசிரியையின் முன்மாதிரி

உடுவில், புதன்

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் ஒரு லட்சம் ரூபா செலவில் வகுப்பறைக்கட்டடம் ஒன்றைஅன்பளிப்பாக அமைத்துக் கொடுக்க மேற்படி பாடசாலையில் பல ஆண்டுகள் ஆசிரியையாக கடமையாற்றிய திருமதி அரிநேசராணியும் அவரின் உறவினர்களும் முன்வந்துள்ளனர்.

பல காலம் இபபாடசாலை ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் கடமையாற்றிய திரு. கே சின்னத்தம்பியின் நினைவாக இக்கட்டடம்அமைக்கப்பட உள்ளது

### முல்லைத்தீவில்

# இராணுவம் ஷெல் தாக்குதல் பாடசாலை, வீடுகள் தீக்கிரை

யாழ்ப்பாணம் வியாழன்

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் காலை மேற்கொள்ளப்பட்ட ஷெல், துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் காயமடைந்துள்ளனர் ஒரு பாடசாலைஉட்பட பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

மேலும் இச்சம்பவத்தின் போது முகாமிலிருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினரை வெளியேறவடாதவாறு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர்த்தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாத இராணுவத்தினர் மீண்டும் முகமிற்குத் திரும்பினர். இதனுல் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் மக்கள் குடியிருக்கும் பகுதிகளை நோக்கி எரிகுண்டு, ஷெல், துப்பாக்கிப்பிரயோகம் என்பவற்றை மேற்கொண்டனர். இதனுல் ஒரு பாடசாலை உட்பட பலவீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இச்சம்பவத்தின்போது காயமடைந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

மு இராமையா (வயது 51) மணற்குடியிருப்பு, சண்முகராசா ஸ்காந்ததேவன் வயது-17) சாவகச்சேரி, வடிவேலு செல்வரட்ணம் (வயது 22), முள்ளியவளை, முத்தையா குகதாஸ் (வயது 18) செம்மலை இவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கு)

## விதை எள்ளு

பண்டத்தரிப்பு, புதன்

தொல்புரம் சமநலச் சேவை நிலையத்தில் வெள்ளை நிறத்தையுடைய நல்ல இன எள்ளு விதை சகாய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுவருகின்றது தரிசு நிலங்களில் இந்த எள்ளை விதைத்து இப்பகுதி விவசாயிகள் பயனடையலாம் என்று தொல்புரம் விவசாயப்போதனுசிரியர் திரு. க. சந்திரசேகரம் தெரிவித்தார்.

## குண்டு வெடித்து 7 பேர் பலி

கராச்சி, மே 6

பாகிஸ்தானில் இடம்பெற்ற 3 குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 7 பேர் பலியாகினர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பணம், வியாழன்

கோண்டாவில் மத்தியக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: இ யோகராஜா துணைத்தலைவர்கள்: வே சுந்தர், க நடராஜா, செயலாளர்: சி ஆனந்தராஜா, உபசெயலாளர்: மா. இலக்கணகுமார், பொருளாளர் ச. பாலசிங்கம், கணக்காய்வாளர் க. நாகலிங்கம், போசகர் மா. உதயகுமார் உட்பட 11 பேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## ஊழியர்கள் தற்காலிக இடமாற்றம்

பலாலி, புதன்

காங்கேசன்துறைச் சந்தியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளை கடந்த வாரம் மூடப்பட்டதையடுத்து, அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் பகுதி பகுதியாகப் பிரிந்து ஏனைய வங்கிக் கிளைகளில் தற்காலிகமாகக் கடமையாற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வங்கிக் கிளையைத் தெல்லிப்பழையில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### ஈச்சமோட்டையில்

## கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம், யாழ் மாவட்ட ரீதியில் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்படும் கரபந்தாட்டப் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது.

இப்போட்டியில் 6-வீரர்பங்குபற்றும் ஆட்டமும், 4-வீரர்கள் பங்குபற்றும் ஆட்டமும் நடைபெறும். 6-வீரர்கள் பங்குபற்றும் ஆட்டத்தில் 27 விளையாட்டுக் கழகங்களும், 4-வீரர்கள் பங்குபற்றும் ஆட்டத்தில் 22 கழகங்களும் பங்குபற்றுகின்றன.

ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் இச்சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்ச்சியில், தொழில் அதிபர் திரு ஏ. செல்வரெட்ணம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். ஆரம்பநாள் விளையாட்டிப் போட்டியில் கலந்து கொண்ட கோஷ்டி வீரர்களை, ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகத் தலைவர் திரு டி.ஏ.எம். குணசிங்கம் பிரதம விருந்தினருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராக, யாழ்ப்பாண கரபந்தாட்டச் சங்கத் தலைவர் திரு. கே. குணரெட்ணமும் கலந்து கொண்டார். [வி]

# புதியதற்கு பதிலாக பழைய பாஸ்போர்ட்!

சுண்டுக்குளி, புதன்

கடவுச்சீட்டு பெறுவதற்கு விண்ணப்பித்தபெண்மணி ஒருவருக்கு அவரது கடவுச்சீட்டுக்குப்பதிலாக 1979ம் ஆண்டு முடிவடைந்த பழைய கடவுச்சீட்டு ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

நல்லூர் அரசடியைச்சேர்ந்த பெண் ஒருவருக்கு கடந்த வாரம் இக்கதி நேர்ந்துள்ளது

இவ்வருடம் ஜனவரி மாதம் கடவுச்சீட்டைப் பெறுவதற்குரிய விண்ணப்பத்தையும்அதற்குரிய ஆவணங்களையும் மேற்படி பெண்மணி நபர் ஒருவர் மூலம் கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் கையளித்திருந்தார்.

குடிவரவு குடியகல்வுதிணைக்களத்திஞல் கடவுச்சீட்டுஒன்று மேற்படி பெண்ணின்வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது

ஆனுல் 1979ம் ஆண்டுமுடிவடைந்தபேருவளையைச் சேர்ந்த சித்தி ஜசீமா என்ற முஸ்லிம் பெண்ணின் பாஸ்போட் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது ஆனுல் கடித உறையினுள் புதிய பாஸ்போட் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வடமராட்சியிலுள்ள

## திருமலை அகதிகளுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

உடுப்பிட்டி, புதன்

திருகோணமலைப் பகுதியிலிருந்து பருத்தித்துறைப் பகுதிக்கு அகதிகளாக வந்தவர்களுக்கு அகதி நிவாரணப பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

குச்சவெளி, பன்குளம், கிண்ணியா, கிளிவெட்டி, தெஹிவத்தை, முள்ளிப்பொத்தானை, மஹிந்தபுர ஆகிய இடங்களிலிருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு நான்கு வாரத்துக்கானநிவாரணப்பர்மிட்டும் தம்பலகாமம் தெற்கு, சங்குவெளி ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்களுக்கு இரண்டு வார நிவாரண பர்மிட்டும் வழங்கப்படும்.

இந்நிவாரணத்தைப் பெறுபவர் திருமலை மாவட்டத்தை வசிப்பிடம் கொண்ட அடையாளஅட்டைஅல்லதுஅகதிகள் புனர்வாழ்வுச் சபையினுல் சிபார்சு செய்யப்பட்டு அத்தாட்சி படுத்தப்பட்ட பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டனம்

கொழும்பு, புதன்

தமிழ்தீவிரவாதிகளுக்கு தமிழக அரசு நிதி மற்றும் பொருள் உதவி வழங்க முன்வந்துள்ளதை அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கண்டித்துள்ளது.

### பளையில்—

## 29 பேருக்கு வீடமைப்புக் கடன்

பருத்தித்துறை, புதன்

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 10 லட்சம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வீடமைப்புக் கடன்பெறத் தகுதியுள்ள 29பேருக்கு முதற்கட்ட வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் வழங்கும் வைபவம் பச்சிலைப்பள்ளி ப நோ. கூ.சங்க மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. ஏ. வி. ஜோர்ஜ் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட வீடமைப்புஅதிகாரசபை மாவட்ட முகாமையாளர் திரு. ஜோசப் மரியான், கிளிநொச்சி கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எம். வாரித்தம்பி, பளை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இந்து ஆலய கோபுரத்தில் இராணுவ சென்றி

பலாலி, புதன்

குரும்பசிட்டிப் பகுதியில் மினி முகாம் அமைத்திருக்கும் இராணுவத்தினர், தமது வசதிக்கேற்றவாறு முகாமைச் சுற்றி சென்றிகளை அமைத்து வரும் அதேவேளை, குரும்பசிட்டி அம்மன் ஆலயத்தின் கோபுரத்திலும் மண்மூடைகளை அடுக்கி சென்றி அமைத்துள்ளனர்.

இக் கோவில் கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள சென்றி நிலையிலிருந்து தூரத்தில் மக்கள் வாழும் பகுதியை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் அக் கோபுரத்தில் அதி சக்தி வாய்ந்த மின் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.

# 25 பேருக்கு தினமும் ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு

கொழும்புத்துறை, புதன்

யாழ். மாநகர பல நோக்குச் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கி புதன்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் இங்கு இயங்குமென்றும், கிழமை நாட்களில் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 12-30 மணிவரை இக்கிராமியவங்கி வாடிக்கையாளர்களுக்காகத் திறந்திருக்குமென்றும் கிராமிய வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இக்கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர் ஒவ்வொரு மாதமும் 15—30ம் திகதிக்குள் அம்மாதத்திற்குரிய ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்றும் வரிசைக்கிரமத்தில் வரும் முதல் 25 பேருக்கே தினமும் ஓய்வூதியம் வழங்கப்படுமென்றும், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நடைபெறும் நாட்களில் புதிய கணக்குகள் ஆரம்பிக்கப்படமாட்டாது என்றும், வங்கிக்கட்டணம் ஐந்து ரூபாவிலிருந்து பத்து ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

சகோதரர்களுக்கிடையில் வாக்குவாதம்:

## அண்ணன் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை

பலாலி, புதன்

இரு சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து 11 வயதான தமயன் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டான்.

ஏழாலை வடக்கை சேர்ந்த செல்வநாயகம்- அருமைநாயகம் (வயது 11) என்ற சிறுவனே இவ்வாறு மரணமானவராவர்.

இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தம்பிராசன் விசாரணை நடத்தினார்.

மரண விசாரணையில் சாட்சியமளித்த இறந்த சிறுவனின் தாயார் தெரிவித்ததாவது;

இறந்தவர் எனது மூத்த மகன் அவருக்கும் மற்றைய மகனுக்குமிடையில் (இறந்தவரின் தம்பி) ஏதாவது சிறு பிரச்சினையென்றாலும், அதைப் பெரிதாக்கி இருவரும் கடுமையாகக் கோபித்து சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள். நான் இருவரையும் ஏசி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என சொல்வது வழக்கம்.

சம்பவ தினத்தன்று இறந்தவரின் காற்சட்டையை தம்பியார் எடுத்து அணிந்ததையடுத்து இருவருக்குமிடையில் சண்டையேற்பட்டது. இறந்தவர் சட்டையை கிழித்தெறிந்தார். நான் இருவரையும் பலமாக ஏசி, இருவரையும் சண்டையிடாமல் இருக்குமாறு கண்டித்தேன்.

பின்னர் இருவருமாக தோட்டம் போனார்கள். சற்று நேரத்தில் இறந்தவரின் தம்பி, அண்ணா மருந்து குடித்துவிட்டார் எனக் குளறிக் கொண்டு ஓடி வந்தார். நான் சென்று பார்த்து, குளறி அயலவர் உதவியுடன் வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சிறிது நேரத்தில் இறந்தார்.

தற்கொலையென மரண விசாரணையதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

---

# யாழ். போதனா வைத்தியசாலையை மூடுவதால் ஏற்படும் பாதிப்புக்கள்

யாழ்ப்பாணம், வியா

"யாழ். போதனா வைத்தியசாலையில் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த பதினைந்து லட்சம்மக்கள் சிகிச்சை பெறும் நிலையிலுள்ளனர்.

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்கம் யாழ். போதனா வைத்தியசாலையை மூடுவதனால் ஏற்படும் விளைவுகளும், பாதிப்புக்களும் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"வடபிராந்தியத்திலுள்ள சகல வசதிகளும், நவீன நிபுணத்துவ வைத்திய முறைகளும் கொண்ட ஒரேஒரு வைத்தியசாலை யாழ். போதனா வைத்தியசாலையாகும். இங்கு முழுமையாக இயங்கக்கூடிய சத்திரசிகிச்சை நிலையத்தில் ஒரு நாளைக்கு சராசரி 35 தொடக்கம் 40 நோயாளிகள் வரை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்."

"முழுமையாக இயங்கக் கூடிய நோய் நிதான ஆய்வு கூடத்தில் ஒருநாளைக்கு 1100 தொடக்கம் 1300 வரையான பரிசோதனைகள் செய்யப்படுகின்றன"

"இங்குள்ள எச்ஸ்ரே கதிர்ப்பட நிலையத்தில் ஒரு நாளைக்கு சராசரியாக நூறு நோயாளிகளுக்கு விசேஷமான முறையில கதிர்ப்படம் எடுக்கப்படுகிறது."

"மேற்படி வைத்தியசாலையில் ஒருநாளைக்கு மூவாயிரம் வரையிலான நோயாளர்களுள் உள் நோயாளர்களும், வெளி நோயாளர்களுமாகச் சேர்ந்து நிபுணத்துவ கிளினிக்கில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்

வடபிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளில் இங்கு மட்டும் தான் கண் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, முறிவு வைத்தியத்திற்கான சிகிச்சை, சரும நோய் நரம்புச் சிகிச்சை நிலையம். மார்பு சத்திர சிகிச்சை, ஆய்வுகூட பரிசோதனை நிலையம், ஆகியன விசேடமாக நிபுணத்துவ வைத்திய கலாநிதிகளால் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக வவனியா தொடக்கமுள்ள நோயாளர்கள் இங்கு தான் சிகிச்சைபெற வருகிறார்கள்.

இங்குள்ள ஏனைய வைத்தியசாலைகளிலும் பார்க்க இந்த வைத்தியசாலையில் மட்டுமே அவசரசிகிச்சைப் பிரிவும், இரத்தவங்கியும் வசதியாகவும், நோயாளிகளுக்கு சிறப்பான சேவை செய்யக்கூடிய முறையில் அமைந்துள்ளது

மேலும் இங்குள்ள வேறு வைத்தியசாலைகளில் நிபுணத்துவ வைத்தியநிலையம் இல்லாதிருப்பதால் [பருத்தித்துறை வைத்தியசாலையில்மட்டும் ஒரே ஒரு வைத்திய நிபுணர் சேவையாற்றுகிறார்] வைத்திய நிபுணர்கள் வெளியில் இயங்க முடியாதநிலையில் இருக்கிறார்கள்.

வட பிராந்தியத்தில் தெல்லிப்பழை வைத்தியசாலையை தவிர எக்ஸ்ரே கதிர்பட நிலையம் இங்கு மட்டும்தான் விசேடமாக இயங்குகின்றது [மன்னார் வைத்தியநிலைய எக்ஸ்ரே நிலையம் மூடப்பட்டுள்ளதால் அங்குள்ள நோயாளிகளும் இங்கு சிகிச்சைபெற வேண்டிய நிலையிலுள்ளனர்.]

ஆயிரத்துப் பதினைந்து படுக்கை அறைகளைக் கொண்ட இவ் வைத்தியசாலையில் சராசரியாக நாளொன்றுக்கு நூற்றி இருபத்தைந்து வரையான நோயாளிக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும், எழுநூறு நோயாளிகள் வரை வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சைபெற்றும், எழுநூறு நோயாளிகள்வரை கிளினிக் [விசேட சிகிச்சை நிலையங்கள்] குகளில் சிகிச்சைபெற்றும், ஆயிரம் நோயாளர்கள் வரை வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றும், நாளொன்றுக்கு 10 தொடக்கம் 12 குழந்தைகள் பிறந்தும், சராசரியாக நூற்றிஐந்துதொடக்கம் நூற்றிப்பத்து வரையான நோயாளிகள் எச்ஸ்ரே படபரிசோதனைக்குட்படுத்தப்பட்டும் முப்பத்தைந்து தொடக்கம் நாற்பது வரையான நோளாளிகள் சாதாரண காலங்களில் விசேட சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டு இவ்வைத்தியசாலையில் மேற்கூறிய விதமாக நோயாளிகள் நாளொன்றுக்கு சிகிச்சை பெற்றும், பராமரிக்கப்பட்டும் வருகிறார்கள்.

இந்த வைத்தியசாலையில் 5 மகப்பேற்று சத்திரசிகிச்சை நிபுணர்களும், நான்கு பொது சத்திரசிகிச்சை நிபுணர்களும் இரண்டு கண் சத்திர சிகிச்சை நிபுணர்களும், ஐந்து பொது வைத்திய கலாநிதிகளும், இரண்டு குழந்தைகள் வைத்திய நிபுணர்களும், சிலஆய்வு கூடம் விசேட பரிசோதகர்களும் கடமையாற்றுகிறார்கள். மற்றும் எழுநூறு ஊழியர்கள் வைத்திய மற்றும் சகல தரப்பினரும் கடமையாற்றுகிறார்கள்

இங்கு ஒரு ஒப்பறேசன் தியேட்டர் [சத்திரசிகிச்சை நிலையம்) மூன்றுபகுதிகளில் வேலைகள் நடைபெறுகின்றது.

"கட்டிட வசதிகள், மின்சார வசதிகள், [அதிவிஷேட பராமரிப்புப் பகுதி]. அவசர மருத்துவபிரிவு, குழந்தை பராமரிப்புப்பிரிவு, இயன் மருத்துவப்பிரிவு, மருந்து சேமிக்கும் களஞ்சிய அறை, அவசரசிகிச்சைக்கான நோயாளிகள் தங்குமிடவசதி, நீர் விநியோகம் வடிகாலமைப்பு முறைகள், பிரேத அறை வசதி, பிரேத விசாரணைப்பகுதி, தாதிகள் பயிற்சிக் கல்லூரிவசதி, மருத்துவ மாணவர்களின் கல்வி வசதி, உதவியாளர்களைப்பயிற்றும் வசதிகள், மருந்துக் கலவையாளர்பகுதிகள், அப்போதிக்கரி சேவைகள், மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்திலும் வைத்தியசாலை அமைந்திருப்பதனால் நோயாளிகளுக்கான போக்குவரத்துவசதிகள் போன்றவையும் அடங்கியமுக்கியமான வைத்தியசாலையாக இருப்பதினாலும், இதனை மூடுவதனால் மேற்குறிப்பிடப்பட்ட வசதிகள் அனைத்தும் தடைப்பட்டு நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் தினமும் நூற்றுக் கணக்கில் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

ஏற்கனவே ஏழுதடவைகள் ஷெல் விழுந்து வைத்தியசாலை பாதிப்புற்றது மார்ச் 7ம் திகதி வெளிநோயாளர்பகுதியில் வீழ்ந்த ஷெல்லினால் ஒருவர் கொல்லப்பட்டார். மார்ச் 30ம் திகதி நோயாளர்விடுதி இல 19, 20ல் வீழ்ந்தஷெல்லினால் 9 பேர் கொல்லப்பட்டும் 25க்கும்மேற்பட்ட நோயாளர்கள் படுகாயமுற்றனர் மேற்படி வைத்தியசாலையைமூடுவதனால் மருத்துவ மாணவர்களின் செய்முறைக்கல்வி பாதிப்படைவதுடன், பரீட்சைக்கு தோற்ற முடியாமல் பாதிப்படையநேரிடும்.

"மேற்படி விடயம் சம்பந்தமாக அரசஅதிகாரைச் சந்தித்து உடனடிநடவடிக்கைகளை மேற்கொள்ளமேற்படி சங்கம் துரிதமாக இயங்கிவருகிறது".

(எ)

---

# சிகிச்சைப் புத்தகங்களை நோயாளர் மீளப் பெறுகின்றனர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். போதனா வைத்தியசாலை அரசினால் மூடப்படுவதைத் தொடர்ந்து வெளி நோயாளர் கிகிச்சைப் பிரிவில் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்கள் தங்கள் சிகிச்சைக்கான புத்தகங்களை யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து எடுத்துச் செல்கின்றனர்.

சுமார் இருபதாயிரத்துக்கும் அதிகமான நோயாளர்களின் புத்தகங்களில் சுமார் இருநூறு புத்தகங்கள் மட்டுமே நேற்று நோயாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க யாழ். போதனா வைத்தியசாலையின் வார்ட்டுகளிலிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களில் அதிகமானோர் நேற்றும் வார்ட்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருதை அவதானிக்க முடிந்தது. [வா]

---

# வெள்ளி தோறும் கடைகள் பூட்டு

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடியில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் சாப்புச் சட்டம் தீவிரமாக அமுல்செய்யப்படும்.

இது தொடர்பாக நெல்லியடி வர்த்தக சங்கம் விடுத்துள்ள பிரசுரமொன்றில், பத்திரிகை வியாபாரம், வீடியோ நாடா வாடகைக்குக் கொடுத்தல் தவிர்ந்த வேறு எந்த வியாபாரமோ சேவைகளோ நடைபெறுது என்று தெரிவித்துள்ளது.

---

## அன்பளிப்பு

(மீசாலை நிருபர்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இரத்தபரிசோதனை செய்யும் கருவி ஒன்றினை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கழகத் தலைவர் வைத்தியசாலை பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் ரி சோமசுந்தரத்திடம் இதனைக் கையளித்துள்ளார்.

---

# 3 மாணவிகளுக்கு புலமை பரிசில்

பருத்தித்துறை, புதன்

1985ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த (சாதா) தரப் பரீட்சை முடிவுகளின்படி வட இந்து மகளிர் கல்லூரியில் மூன்று மாணவிகள் புலமைப் பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

செல்விகளான சத்தியரேகா சிவப்பிரகாசம், சரோஜினி ஆறுமுகம், பொற்செல்வி கிருஷ்ணபிள்ளை ஆகிய மூவருமே புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொள்ளத் தெரிவு செய்யப் பட்டவர்களாவர்

செல்வி சத்தியரேகா சிவப்பிரகாசம் 663 மொத்தப் புள்ளிகளைப்பெற்று அகில இலங்கை ரீதியில் 17ம் இடத்தைப் பெற்றுள்ளார்.

---

## சம்பியனைத் தெரிவு

நெல்லியடி, புதன்

கட்டைவேலி- நெல்லியடி ப நோ. கூ. சங்கம் தனது 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய கரப்பந்தாட்டப் போட்டியில் நெல்லியடி ஸ்பேஸ் கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மென் பந்துப் போட்டியில் அல்வாய் ஸ்ரீ கலைமகள் விளையாட்டுக்கழகம் முதலிடத்தைப் பெற்றது.

போட்டிகளில் பிரதம அதிதியாக வவனியா மாவட்டக் கல்விப்பணிப்பாளர் வெ. சபாநாயகமும், கரவெட்டி உப அரசாங்க அதிபர் இ ஐயாத்துரையும் கலந்துகொண்டனர்.

---

# கண்டியில் சிறந்த கிரிக்கட் வீரர் நடராசா

யாழ்ப்பாணம், வியா.

இலங்கைப் பாடசாலைகளிடையே இவ்வருடம் நடைபெற்ற கிரிகெட் போட்டிகளில், சிறந்த ஆட்டக்காரர்களில் ஒருவராக டேமியன் நடராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கண்டி சென். அந்தனிஸ் கல்லூரியின் கிரிக்கெட் கோஷ்டியின் காப்டனான செல்வன டேமியன் நடராசா, இவ்வருடம் இலங்கை பாடசாலை தெரிவுக் கோஷ்டியில் அங்கம் வகித்து வருகின்றார். இவர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஆஸ்திரேலியா பாடசாலை தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்கு எதிராக சிறப்பாக விளையாடி கிரிக்கெட் அவதானிகளின் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது

நீண்ட வருடங்களின்பின், இலங்கைப் பாடசாலை தெரிவுக் கோஷ்டியில் ஒரு தமிழ் வீரர் அங்கம் வகித்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

டேமியன் நடராசா இவ்வருடம் கிரிக்கெட் போட்டிகளில் பல சாதனைகளை புரிந்து தமது கல்லூரிக்கு பெரும் புகழைத் தேடிக் கொடுத்துள்ளார்.

இவ்வருடம், 17 போட்டிகளில் இவரது தலைமையில் கலந்து கொண்ட சென் அந்தனிஸ் கல்லூரி, எந்தவொரு போட்டிகளிலும் தோல்வியடையாது. ஐந்து போட்டிகளில் வெற்றி பெற்றது. இவற்றில், கிரிக்கெட் ஆட்டத்தில் மிகப்பலம் கொண்ட கோஷ்டியாகத் திகழ்ந்துவந்த, கொழும்பு றோயல் கல்லூரியை 22வருடங்களின்பின் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

செல்வன் டேமியன் நடராசாஇவ்வருடம் '6-செஞ்சரி' உட்பட மொத்தம் 1253 ஓட்டங்களைப் பெற்று, தமது கல்லூரியில் ஒரு புதிய சாதனையை ஏற்படுத்தினர்.

இலங்கை மின்சாரசபையில் சிவில் அதிகாரியாக கடைமை புரியும் திரு எம் நடராஜாவின் புதல்வரான செல்வன் டேமியன் நடராசா, யாழ். நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (வி)

---

## "உலகில் காணமுடியாத செயல்"

யாழ்ப்பாணம், வியாழன்

"மக்களின் மிக முக்கிய மானவற்றை அளித்து காப்பாற்ற வேண்டிய அரசு ஏற்கனவேயுள்ள அரைகுறை வசதிகளையும் தட்டிப் பறிக்க முனைவது உலகில் எங்குமே காணமுடியாத ஒரு செயலாகும்."

இவ்வாறு யாழ். பெரியாஸ்பத்திரியை இம்மாதம் எட்டாம் திகதியுடன் மூடுமாறு அரசு விடுத்த அறிவித்தலை கண்டித்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ். மாவட்ட குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"பேரினவாத யூ. என். பி. அரசின் இந்நடவடிக்கை இப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் தங்களுடைய பிரஜைகள் அல்ல என்பதையே உணர்த்துகின்றது.

நாகரீகமற்ற இந்த மக்கள் விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த ஒன்றிணைந்த மக்கள் போராட்டம் அவசியமாகும்." (சி)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 7 5-87

உரிமைக்காகப் போராடும்—

# இலங்கைத் தமிழர்க்கு அனைத்து மக்களும் ஆதரவளிக்கவேண்டும்"

### — இந்திய உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம்

சென்னை, மே 6

இலங்கையில் தமிழர்கள் மீது அரசு மேற்கொண்டு வரும் இராணுவ, பொருளாதார தடை நடவடிக்கைகளை கண்டித்து இந்திய உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்படுகையில்;

தங்களின் பாரம்பரிய தாயகத்தில் பாதுகாப்புடனும், கண்ணியமாகவும், கௌரவமாகவும் உயிர் வாழும் உரிமைக்காக போராடும் இலங்கைத் தமிழர்களுக்கு அனைத்து மக்களும் ஆதரவு நல்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## ஹெலி தாக்குதல் வயோதிபர் காயம்

பலாலி, புதன்

பலாலி பகுதியில் வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டு இருந்த வயோதிபர் ஹெலியின் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

வை. சின்னத்துரை [வயது 58] என்ற வயோதிபரே காயமடைந்தவராவார்.

## வங்கி வாடிக்கையாளர் பாதிப்பு

பலாலி, புதன்

கடந்த இருவார காலமாக மூடப்பட்டிருக்கும் காங்கேசன்துறை இலங்கை வங்கி கிளை இதுவரை திறக்கப்படாத காரணத்தால் வங்கி வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பதற்றநிலை காரணமாக வங்கி ஊழியர்கள் அங்கு கடமை செய்ய முடியாத நிலையை அடுத்தே இவ் வங்கி கிளை மூடப்பட்டுள்ளது.

## ஷெல்தாக்குதல் இளம்பெண்காயம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ் கோட்டை இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலினால் சுண்டுக்குளியைச்சேர்ந்த இளம்பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் சுண்டுக்குளி விதானையார் வீதியிலுள்ள வீடொன்றில்விழுந்துவெடித்ததினால் வீட்டின் ஹோலில் நித்திரையிலிருந்தஇளம்பெண் சீதா (வயது 25) படுகாயம் அடைந்தார். (வா)

## ஆலமரத்தின்கீழ் அகதிகள்

(பண்டத்தரிப்பு நிருபர்)

வவுனியாவில் வாழ்ந்துவந்த ஆறு மலையக குடும்பங்கள் அகதிகளாக வெளியேறி பல்வேறு இடங்களிலும் தங்கிவிட்டு தற்போது பெரியவிளான் பிள்ளையார் கோவிலுக்கு பின்பக்கத்திலுள்ள ஆலமரத்தின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

## தொடர்ந்து விரிவுரைகளைப் பகிஷ்கரிக்க பல்கலைக்கழக மாணவர் முடிவு

யாழ்ப்பாணம், வியா

யாழ் போதனா வைத்திய சாலையை மூடவேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் உடன் வாபஸ் பெறவேண்டும் எனவும், விமானத்தாக்குதல், ஷெல் தாக்குதல் என்பவற்றை நிறுத்தக்கோரியும், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்இன்று முதல் தமது விரிவுரைகளைத் தொடர்ந்து பகிஷ்கரிப்பதென முடிவு செய்துள்ளனர்.

யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. (ஒ)

## தபால் நிலையம் இடமாற்றம்

பலாலி,புதன்

காங்கேசன்துறை சந்திக்கு அருகாமையிலிருந்த தபால் நிலையம் மாவிட்டபுரம் சந்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தபால் நிலையம் அமைந்திருந்த வீதியால் இராணுவம் அடிக்கடி செல்லுதலும் இராணுவத் தாக்குதலினால் கட்டிடம் சேதமடைந்ததையடுத்து ஊழியர் அங்கு கடமையாற்ற அச்சம் தெரிவித்ததாலும் மாவிட்டபுரம் சந்திக்கு மாற்றப்பட்டுள்ளது.

## அல்லைப்பிட்டியில் ஹெலி தாக்கி இளம்பெண் மரணம்

[வேலணை நிருபர்]

அல்லைப்பிட்டி கிராமத்தைச் சுற்றி தாழப்பறந்து வட்டமிட்டஹெலிகொப்டரிலிருந்து பொதுமக்களை நோக்கி 50 கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டதினால் இளம்பெண் ஒருவர் தலைபிளந்து பலியானார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அல்லைப்பிட்டியில் வதியும் ஞானமலர் அந்தோனி [13 வயது] என்னும் இளம் பெண்ணே மரணமானவராவார்.

அல்லைப்பிட்டி பிலிப் நேரியார் கோயிலுக்கு அருகாமையில் புதிய கடைத்திறப்புவிழாவொன்றில் கலந்துகொண்டிருந்த பொதுமக்கள் மீதே ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. (ஒ)

## தாதிமார் பாடசாலையும் மூடப்படும்

யாழ்ப்பாணம்,வியா.

யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையை இம்மாதம் 8ம் திகதி முதல் மறுஅறிவித்தல் வரை மூடிவிடுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### க. தம்பிராசா
(இளைப்பாறிய ஆசிரியர் வேலணை)

வேலணை கிழக்கு 5ம் வட்டாரத்தை சேர்ந்த கனகசபை தம்பிராசா இளைப்பாறிய ஆசிரியர் காலமாகிவிட்டார். இவர் இராசம்மாவின் அன்பு கணவரும், பூமகள், முருகதாஸன் (சிலோ டிரேட் சென்ரர் கொழும்பு), கணேசதாஸன் (ஆசிரியர், சித்திவிநாயகர் வித்தியாலயம் புங்குடுதீவு), யோகதாஸன் (ஆசிரியர்), சிவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் ச. சத்தியநாதன், (பெருந்தெருக்கள் திணைக்களம்), பங்கஜம், சுபாசினி (ஆசிரியை, சைவப்பிரகாச வித்தியாசாலை வேலணை) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சிகா, நர்துஜா, லாவண்யா ஆகியோரின் அன்பு பேரனுமாவார். ஈமக்கிரியைகள் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

[சி-8963] தகவல்:- ச. சத்தியநாதன்

### முருகுப்பிள்ளை தணிகாசலம்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பல்லப்பை புலோலி தெற்கு புலோலியில் வசிப்பவரும் இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தரும், யாழ்ப்பாண துறைமுக வத்தை பொதுச் சேவை கூட்டுறவுச் சங்க செயலாளருமாகிய முருகுப்பிள்ளை தணிகாசலம் காலமாகிவிட்டார். அன்னார் தெய்வானைப் பிள்ளையின் அன்புக் கணவரும், பத்மாவதி, பத்மதாசன், குகதாசன் பதஞ்சோதி, பத்மாசனி, மோகனதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (7 5-87) வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: த. சிவம் [சி-8964]

### திரு. குமாரசாமி நடராஜா

திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியைச் சேர்ந்த குமாரசாமி நடராஜா என்பவர் காலமாகிவிட்டார். இவர் அன்னலெட்சுமியின் அன்புக் கணவரும், நவரட்ணம், கனகலிங்கம், பாக்கியலெட்சுமி (யாழ். பல்கலைக்கழகம் நுண்கலைப் பிரிவு), இராஜேஸ்வரி, செல்வராணி (யாழ். பல்கலைக்கழகம் நிதிப் பிரிவு) ஆகியோரின் தந்தையும், சந்திரேஸ்வரி, ஞானசரஸ்வதி, ரஞ்சன் ஆகியோரின் மாமனாரும், அருள்ஜோதி, தக்ஷினி, தவஜோதி, ஜனகன், தாரணி, சஜானனன், ஸ்வஸ்திக்கா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் ஆனைக்கோட்டையிலுள்ள அவரின் மூத்த மகனின் இல்லத்தில் இன்று வியாழன் (07-05-87) காலை 10-00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:- ந. நவரட்ணம்,
"மகேஸ்வரி வாசா",
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
(ஆறுகால்மடம்)

[சி-8962]

## விரிவுரைகள் 18ல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,வியா.

யாழ் பல்கலைக்கழக கலைப் பீட மாணவர்களின் 3ம் தவணைக்கான விரிவுரைகள் இம் மாதம் 18ம் திகதி ஆரம்பமாகும் என கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (வா)

## முன்னாள் சி.ஐ.ஏ. பணிப்பாளர் மரணம்

வாஷிங்டன், மே. 6

அமெரிக்க உளவு ஸ்தாபனமான (சி. ஐ. ஏ) முன்னாள் பணிப்பாளர் திரு. வில்லியம் கேஸி தமது 74-வது வயதில் இன்று காலமானார்.

இவர் 1981 முதல் 1987 ஜனவரிவரை சி. ஐ ஏ. ஸ்தாபனத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றினார். ஈரானின் ஆயுதவிற்பனை விவகாரம் தொடர்பான சர்ச்சையில் இவரின் பெயரும் சம்பந்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

மூளையில் ஏற்பட்ட கட்டியினால் இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் அதனைத் தொடர்ந்து மரணமானதாகவும் தெரியவந்துள்ளது. [க]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B /81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu. Telephone: — 22389 24126.

## மக்கள் வெளியேற்றம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வெளியேறிக்கொண்டிருப்பது ஒருபுறமிருக்க, நேற்றும் பலாலிக்கும் கோட்டைக்குமிடையே பலதடவைகள் ஹெலிகொப்டர்கள் வந்துபோன வண்ணம் இருந்தன. ஹெலிகொப்டர் கோட்டைக்குள் வந்து இறங்கும் ஒவ்வொரு சமயமும் கோட்டை இராணுவத்தினர் ஷெல் பிரயோகத்தை மேற்கொண்ட வண்ணமிருந்தனர்.

## வர்த்தகர் வெளியேற்றம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய கடைவீதி சத்திரத்துச்சந்தி, ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையம்வரை மின்சார நிலைய வீதி ஆகிய இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் இருந்தே பொருட்கள் ஏற்றப்பட்டன.

நேற்றுக் காலை முதல், மாலைவரை தங்கள் பொருட்களை ஏற்றுவதில் ஈடுபட்டிருந்த வர்த்தகர்கள், பொதுமக்கள் மீது பிற்பகல் 2மணியளவில் ஹெலியில் இருந்து சரமாரியான துப்பாக்கிச்சூடும், கோட்டையில் இருந்து ஷெல் பிரயோகமும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தின்போது பொதுமக்கள் அதிகமாகக் கூடியிருந்த ஸ்ரான்லி வீதி ஆரியகுளம் சந்திவரை ஆகாயத்தால் முற்றுகையிட்ட ஹெலியிலிருந்து இராணுவத்தினர் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் இருந்தனர்

இச்சம்பவத்தையடுத்து ஆரியகுளம்சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சகல மினிபஸ்களும், இ. போ ச. பஸ்களும் இலுப்பையடிச் சந்திக்கு விரைந்தன. வீதியில் நின்றிருந்த மக்கள் நாலாபக்கமும் சிதறிஓடினர். ஸ்ரான்லி வீதிக் கடைகள் யாவும் உடனடியாக மூடப்பட்டன. [வா]

## வெறிச்சோடிய வார்டுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர்கள் வீடுதிரும்பியதையடுத்து ஆஸ்பத்திரியின் பெரும்பாலான வார்ட்டுகளும் வெறிச்சோடிக்காணப்பட்டன.

ஆஸ்பத்திரியில் கடமைபுரியும் டாக்டர்கள், தாதிகள் நிர்வாகப்பகுதி ஊழியர்கள் மற்றும் ஆஸ்பத்திரி ஊழியர்கள் மட்டுமே நேற்று ஆஸ்பத்திரிகளில் நடமாடியதை காணமுடிந்தது.

ஆஸ்பத்திரியில் இயங்கிவந்த கிளினிக்குகள் யாவும் மூடப்பட்டிருந்தன வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவந்த நோயாளர்களில் ஒருசிலர் தங்களது புத்தகங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தனர். [வா]